விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 27 சனிக்கிழமை (11.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 204

SATS-TECH ENGINEERS (PVT) LTD
0114562929, 0212228812, 0212225908




1 Year Subcription free with All Tamil + All sports
Including Setmax, Pogo,Cartoon network BBC,CNN

# பொதுமக்களின் இழப்புக் குறித்த தகவலை மாற்றப் போவதில்லை

## ஐ.நா. சபை திட்டவட்டம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது ஏற்பட்ட பொதுமக்களின் இழப்புக்கள் தொடர்பாக தாம் ஏற்கனவே தெரிவித்த எண்ணிக்கையை மாற்றிக் கொள்ளப்போவதில்லை என ஐக்கிய நாடுகள் சபை திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றது. (11ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் புலி உறுப்பினர்களுக்கு எதிராக நீதிமன்றில் விரைவில் வழக்குத் தாக்கல்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ள 10 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களில் ஆயிரம் பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கைகளை விளக்கும் வகையில் வன்னி இறுதி மகா யுத்தம் என்ற பெயரில் கொழும்பில் நேற்று முன்தினம் நூலொன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. (11 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியூடாக பயணிகள் போக்குவரத்து; ஆராய அமைச்சர் குழு யாழ்.வருகிறது!

(யாழ்ப்பாணம்)

ஏ-9 பாதையூடாக மக்கள் போக்குவரத்துச் சேவையை ஆரம்பித்து வைப்பதற்கான நடவடிக்கைகளை ஆராய விரைவில் அமைச்சர் குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளது.

இத்தகவலை மீன்பிடி, நீரியல் வள அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற விஷேட மாநாட்டில் வைத்தே அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ஏ-9 பாதையூடாக மக்கள் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய அடுத்த சில வாரங்களில் அமைச்சர் குழு ஒன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளது. அக்குழுவில் நானும் (11ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து இலங்கையர்களுக்கு ஒஸ்லோவில் சிறைத்தண்டனை

(ஒஸ்லோ)

சாமுராய் வகை வாள்களைப் பயன்படுத்தி தாக்குதலை மேற்கொண்ட ஐந்து இலங்கையர்களுக்கு ஒஸ்லோ நீதிமன்றம் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

11 வருடங்கள் முதல் 14 வருடங்கள் வரையில் குறித்த இலங்கையர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நோர்வேயின் கலபெக்க பகுதியில் ரமணன் விவேகானந்தன் என்ற 20 வயது இளைஞரை வாளால் வெட்டிக்கொன்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதனால் இந்த தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியிலிருந்து குறித்த நபர்கள் ஒஸ்லோவின் கலபெக்க பகுதிக்கு வருகை தந்து இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

படுகொலைச் சம்பவத்துடன் ஐந்து பேருக்கு தொடர்பு இருப்பதாகவும் மேலும் ஐந்து பேருக்கு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பு (11ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாண கடற்றொழில் அபிவிருத்திக்கு 895 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு!

### அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண கடற்றொழில் அபிவிருத்திக்கு 895 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மீன்பிடி நீரியல் வள அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டு கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கான விசேட மாநாடு மீன்பிடி நீரியல் வள அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தலைமையில் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இம் மாநாட்டில் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீன்பிடி நீரியல்வள அமைச்சின் செயலாளர் பியசேன, யாழ்.அரச அதிபர் க. கணேஷ், யாழ்.மீன்பிடி நீரியல்வள திணைக்கள பிரதிப் பணிப்பாளர் தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் (11 ஆம் பக்கம் பார்க்க)

## ஜானக பெரேரா கொலை சந்தேக நபர் கைது

(கொழும்பு)

முன்னாள் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மற்றும் 36 பேரும் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் இருந்து செயற்பட்டதாகக் கருதப்படும் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். (11ஆம் பக்கம் பார்க்க)

## உறுதியளித்தபடி தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டும்

### இந்தியா வலியுறுத்தல்

(புதுடில்லி)

இந்திய அரசிடம் இலங்கை அரசு ஏற்கனவே உறுதியளித்தப்படி சிறுபான்மை தமிழர்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு வழங்குவதற்கு தேவையான அரசியல் நடவடிக்கையை தொடங்க வேண்டும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக டில்லி மேல் சபையில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்து உரையாற்றிய போது மேலும் கூறியதாவது,

விடுதலைப் (11ஆம் பக்கம் பார்க்க)

கிருபா லேணர்ஸ்

சாரதி பயிற்சிப் பாடசாலை



யாழ் மண்ணில் அனுபவம் உள்ள பயிற்சியாளர் களை
தன்னகத்தே கொண்டு நடத்தப்படும் எமது நிறுவனத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட
வகுப்புகள் நடைபெறும்



உரிமையாளர்: A.கிருபாகரன்

226,கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

T.P-077-7225292/ 021 222 4353

## புத்தூர் சோமஸ்கந்தா , தெல். மகாஜனா

# இரு பாடசாலைகளின் அணிகளும் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியின் ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி ஆகிய பாடசாலை அணிகள் தலா இரு பிரிவுகளில் சம்பியனாகின.

வடக்கு மாகாண பாடசாலை மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் மன்னாரில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விபரம் முறையே வருமாறு,

**ஆண்கள் பிரிவில்**

*15 வயதுக்குட்பட்டோர்*

ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம், அளவெட்டி அருணாசலம்வித்தியாலயம், வவுனியா இந்துக் கல்லூரி,

*17வயதுக்குட்பட்டோர்*

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, உடுப்பிட்டி அ.மி பாடசாலை, வவுனியா மடுக்கந்த தேசிய பாடசாலை.

*19 வயதுக்குட்பட்டோர்*

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, அச்சுவேலி மகா வித்தியாலயம், மன்னார் அல்மினா மகா வித்தியாலயம்.

**பெண்கள் பிரிவில்**

*15வயதுக்குட்பட்டோர்*

அளவெட்டி அருணோதயா கல்லூரி. அளவெட்டி அருணாசலம் வித்தி. ,வவுனியா தர்மபால மகா வித்தியாலயம் .

*17 வயதுக்குட்பட்டோர்*

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சங்கானை சைவப்பிரகாச மகா வித்தி. மன்னார் தோட்டசேரி அ.மி.த.க. பாடசாலை.

*19 வயதுக்குட்பட்டோர்*

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, சங்கானை சைவப்பிரகாச மகா வித்தி., வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலம்.

## வவு. நலன்புரி முகாம் மக்களுக்கு

# சமைத்த உணவு வழங்கிய ஒப்பந்தகாரர்கள் ஆர்ப்பாட்டம்

இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்கிய ஒப்பந்தகாரர்கள் வவுனியா செயலகத்தில் நிலுவையாக உள்ள பணத்தை தாமதமின்றி வழங்குமாறு கோரி பதாகைகளை ஏந்தி நேற்று ஒரு நாள் அடையாள ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். வவுனியா செயலக வளவில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒப்பந்தகாரர்களிடமிருந்து சமைத்த உணவு பெறப்பட்டு வவுனியா செயலகத்தினால் வழங்கப்பட்டு வந்தது.

சுமார் 4 மாதங்கள் இவ்வாறு சமைத்த உணவு வழங்கப்பட்டதாகவும் நாளொன்றுக்கு ஒருவருக்கு 130 ரூபா பெறுமதியான 3 வேளை உணவு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டு அதற்காக ஒரு தொகைப் பணம் தங்களுக்கு வவுனியா செயலகத்தினால் வழங் கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

தங்கள் ஒவ்வொருவருக்கும் இலட்சக்கணக்கான ரூபாய் நிலுவையாக இருப்பதாகவும் இதனை வழங்குவதற்கு தற்போது அதிகாரிகள் சாக்குபோக்குகள் கூறுவதா கவும் ஒப்பந்தக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் அரச சுற்று நிருபத்தின்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டணத்தின் படியே கொடுப்பனவுகளை வழங்க முடியும் என அரச தரப்பில் கூறப்படுகின்றது.

சமைத்த உணவு வழங்கிய வகையில் சுமார் 250 மில்லியன் ரூபாய் நிலுவையாக இருப்பதாகவும் இதில் ஒரு பகுதி நிதி தற்போது கிடைத்திருப்பதாகவும் இதனை வழங்குகையிலே ஒப்பந்தகாரர்களிடமிருந்து சமைத்த உணவுக்கான கட்டணம் தொடர்பாக பிரச்சினைகள் எழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## கலைஞர் விபரத் திரட்டு நூல் வெளியீட்டு விழா

யாழ் . மாவட்ட கலை கலாசார பேரவை கலைஞர் விபரத் திரட்டு விழா தொகுதி-1 நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்று கிழமை காலை 9 மணிக்கு இளங்கலைஞர் மன்றத்தில் யாழ். மாவட்ட கலைகலாசாரப் பேரவைத் தலைவர் யாழ் அரச அதிபர் க. கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் சிறப்பு விருந்தினராக பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக செயலாளர் கலாபூஷணம் செ. மெற்றாஸ்மயிலும் கலந்து கொள்ளவுள்ளனர். நூலின் வெளியீட்டுரையினை யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும் மதிப்பீட்டுரையை திருமதி மனோன்மணி சண்முகதாஸும் வழங்கவுள்ளனர். (ச-5)


## விற்பனைக்கு

பொற்பதி வீதி, கந்தர்மடம், மணியகாரன் லேன், ஆனைக்கோட்டை, பிரம்படிலேன், நல்லூர், யாழ்ப்பாணம், பிறவுண்றோட், மாம்பழம் சந்தி, வேம்படி வீதி ஆகிய இடங்களில் வீடுகள், காணிகள் விற்பனைக்கு உண்டு. நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். தரகர் தேவையில்லை.

சேவை முகவர்
தொடர்பு : சுந்தரம்
தொடர்பு நேரம்:- பகல் 1 மணி-2 மணி
T.P- 021 2229177 (2939)

## வெளிவந்துவிட்டது

**Speed Marketing**
**Royal College Exam Paper**

- ★ வணிகக்கல்வி
- ★ கணக்கீடு
- ★ பொருளியல்
- ★ பௌதிகவியல்
- ★ இரசாயனவியல்
- ★ இணைந்த கணிதம்

அன்னை புத்தகசாலை
இல.7,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.0212229881 (C-2783)

## வேதாகம கருத்தரங்கு

(முழு நேர ஊழியர்களுக்கும் ,மனைவிமார்களுக்கும் மட்டும்)

விடயம் : "நம்பகமான ஆலோசகரும், ஆலோசனையும்"
"MENTORING"

இடம் : சீயோன் தேவாலயம்
24, இராமையா செட்டியார் ஒழுங்கை , யாழ்ப்பாணம்.
(பழைய O.P.D முன்பாக)

காலம் : 31/07/2009
நேரம் : காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
செய்தியாளர் : போதகர் யோகனன் D.பிலிப்
கட்டணம் : தனி நபர் - 50/=, தம்பதியினர் -75/=
பாடக்குறிப்புகள் , தேநீர் செலவுகள் உட்பட)
விண்ணப்ப முடிவு திகதி : 22/07/2009

குறிப்பு : விண்ணப்பங்கள் யாவும் முழுப்பெயர் , விலாசம் , ஊழிய நிலை , சபையின் பெயர் போன்ற விபரங்களுடன் **தலைமைப் போதகரின் சிபாரிசுடன்** அனுப்பப்படவேண்டும். இறுதி முடிவு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு : போதகர்
சீயோன் தேவாலயம்
347 , நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
021-2222707

(2669)



## காரைநகர் வியாவில்
## பூரணை பொற்கலை சமேத ஐயனார் ஆலய
### 500 ஆண்டுகளின் பின் நடைபெறும் முதலாவது
## மகோற்சவ விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| கொடியேற்றம் | 12.07.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி |
| தேர் வெள்ளோட்டம் | 19.07.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி |
| தேர்த்திருவிழா | 20.07.2009 திங்கட்கிழமை காலை 10 மணி |
| தீர்த்தத் திருவிழா | 21.07.2009 செவ்வாய்க்கிழமை காலை 9 மணி |
| கொடி இறக்கம் | 21.07.2009 செவ்வாய்க்கிழமை மாலை 9 மணி |
| பூங்காவனத் திருவிழா | 22.07.2009 புதன்கிழமை மாலை 9 மணி |
| வைரவர் மடை | 23.07.2009 வியாழக்கிழமை மாலை 4 மணி |

தேவாலய பிரதம குரு

சிவாகம கிரிய தத்துவநிதி
ஸ்ரீவிஸ்வஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்

ஈழத்தின் தலைசிறந்த சிவாச்சாரியர்கள் கலந்து சிறப்பிப்பார்கள்

-அடியார்கள் கலந்து அருளை பெறுவீர்களாகுக-
உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

வியாவில், காரைநகர் -ஆலய அறங்காவலர்

வாழ்த்துவோர்:-
**E.S.P. நாகரட்ணம் அன்கோ**
(C-2779)

## யாழ் மாவட்டத்திற்கான யூனியன் அஷ்யூரன்சின் -மாபெரும் வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதிக் கம்பனியின் நிரந்தர வேலைவாய்ப்புக்கான விண்ணப்பங்கோரல்.

பதவிகள்:-
01. காப்புறுதி ஆலோசகர் - INSURANCE ADVISOR
02. PERSONAL FINANCIAL ADVISOR-தனி நிதி ஆலோசகர்.
(03.SENIOR PERSONAL FINANCIAL ADVISOR.)
04.PERSONAL FINANCIAL MANAGER- தனி நிதி முகாமையாளர்.
(05.SENIOR PERSONAL FINANCIAL MANAGER)

கல்வித் தகைமைகள்:-
01.G.C.E. சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி.

மேலதிக தகைமைகள்.:-
01. 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
காப்புறுதித் துறையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது(முக்கியமல்ல)

வேலைவாய்ப்பின் மூலம் பெறக்கூடிய நன்மைகள்.
- ◈ அதியுயர் சம்பளம் பெறக்கூடிய வாய்ப்பு.
- ◈ ஆறுமாத காலத்தில் அதீத திறமையுடன் வேலை செய்பவர்கள் நிரந்தர வருமான திட்டத்திற்குள் உள்வாங்கப்படுவார்கள்.
- ◈ வெளிநாட்டு சுற்றுலாவிற்கான அரிய வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளல்.
- ◈ இலகு தவணை முறையில் வாகனக்கடன் வசதிகள்.
- ◈ வருடாவருடம் விருதுகளை பெறும் வாய்ப்பு.
- ◈ உங்கள் திறமைகளுக்கேற்ற வகையில் விரைவான பதவியுயர்வுகள்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் :-யூனியன் அஷ்யூரன்ஸ் PLC
139,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.

நேரம் : மு.ப.9.30 மணி
காலம் : 14.07.2009 (செவ்வாய்க்கிழமை)

N.பிரகாஷ்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
யூனியன் அஷ்யூரன்ஸ் PLC

T.P.-0212223753(OFFICE)
0773769045
(2936)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
11 01 1934

மறைவு
09 06 2009

## அமரர் கந்தையா சாமி

(K.S. அம்பாள் மினிபஸ் உரிமையாளர்)

கடந்த 09.06.2009 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா சாமி அவர்களின் அந்தியேட்டி அழைப்பு நாளை (12.07.2009) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோவில் கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் எமது குடும்பத்தலைவரின் மரணச்செய்தி கேட்டு வருகை தந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

1/5, 2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்

# இன்று ஒரு தகவல்

## பாடகர் பலவகை

ஒருவர் அவசரமாக எங்கேயோ போய்க்கொண்டிருந்தார்.

"எங்கே இவ்வளவு அவசரம்?" என்றேன்.

"சபாவுக்குப் போகிறேன். சங்கீதக் கச்சேரிக்கு சீக்கிரம் போனால் தான் முதல்வரிசையில் இடம் கிடைக்கும்." என்றார்.

"சங்கீதத்தை நன்றாக ரசிப்பீர்கள் போலிருக்கு!" என்றேன்.

"அப்படியில்லை. நான் சங்கீத வித்துவான்களை ரசிப்பவன்" என்றார்.

"என்ன சொல்றீங்க?" என்றேன்.

"சங்கீதம் பாடுபவர்கள் செய்யும் சேஷ்டைகளெல்லாம் எனக்கு மிகவும் பிடிக்கும். அதனால் தான் முதல்வரிசையில் உட்கார்ந்து அவர்கள் முகத்தை பார்த்து ரசிக்கிறேன்.." என்றார்.

இப்படியும் சில ரசிககர்கள் நம்மில் உண்டு.

அப்படிப்பட்ட ரசிகர்களுக்கான தகவல் இது.

இதைத்தெரிந்து கொண்டால் அவர்களை இன்னும் கொஞ்சம் விபரமாக அனுபவித்து ரசிக்கலாம்.

பாடும்போது சேஷ்டை செய்யும் வித்துவான்களில் 24 வகை உண்டு என்கிறது சங்கீத சாஸ்திரம்.

அது எப்படி தெரியுமா?

சிலபேர் பாடும்போது பல்லைக் கடித்துக்கொண்டு பாடுவார்கள். அவர்களுக்கு 'ஸ்ந்தஷ்டர்' என்று பெயர்.

ரஸபேதமாக இசைப்பவர்களுக்கு 'உத்குஷ்டர்' என்ற பெயர்.

சில வித்துவான்கள் பாடும்போது அடிக்கடி ஸு,ஸு என்று ஒலியெழுப்புவார்கள் அவர்களுக்கு 'ஸுத்காரி' என்று பெயர். சிலபேர் பயந்து கொண்டே பாடுவார்கள்.

இப்படி பயத்தோடு பாடுபவர்களுக்கு 'பீதர்' என்று பெயர்.

சிலர் வேகவேகமாகப் பாடுவார்கள் அவர்களுக்கு 'சங்கீதர்' என்று பெயர்.

வாயைத்திறந்து கொண்டே பாடுபவர்கள் 'கராளி' என்ற வகையைச் சேர்ந்தவர்கள்.

ஸ்வரங்களை சுருதிக்கு அதிகமாகவோ குறைவாகவோ பாடுபவர்களுக்கு 'விகலர்' என்று பெயர்.

சிலபேர் பாடுகிறோம் என்று சொல்லிவிட்டு காக்கைபோல் கத்துவார்கள். அதாவது காக்கை போல் கடூரமான குரல் உள்ளவர்களுக்கு 'காகீ' என்று பெயர்.

தாளத்தோடு ஒத்துப்போகாமல் தாளம் தப்பிப் பாடுபவர்களுக்கு 'விதாளர்' என்று பெயர்.

சிலபேர் ஒட்டகச் சிவிங்கி போல் கழுத்தை மேலே தூக்கி பாடுவார்கள். இவர்களுக்க 'கரபர்' என்று பெயர்.

ஆடு மாதிரி கழுத்தை வைத்துக்கொண்டு பாடுபவர்களுக்கு 'உத்வடர்' என்று பெயர்.

சிலபேர் பாடும்போது பார்த்தீர்களானால் நெற்றி, முகம், கழுத்து எல்லாவற்றிலும் நரம்புகள் புடைக்கும் இப்படி பாடுபவர்கள் 'ஜோம்பகர்'

பாடும்போது சுரைக் குடுக்கை மாதிரி கழுத்தை வைத்துக் கொள்பவர்கள் உண்டு அவர்களுக்கு தும்பகி என்று பெயர்.

கழுத்தை கோணிக்கொண்டு பாடுபவர் 'வக்ரீ

கைகளை அடிக்கடி நீட்டி நீட்டி பாடுபவர் 'ப்ரஸாரி' கண்களை மூடிக்கொண்டு பாடுபவர் 'நிமீலகர்'

ரஸங்களுக்கு ஒவ்வாமல் பாடுபவர் 'விரஸர்' தவிர்க்க வேண்டிய ஸ்வரங்களைப் பிடித்துப் பாடுபவர் 'அபஸ்வரர்'

தழுதழுத்த குரலோடு சொற்களை தெளிவற்ற முறையில் உச்சரிப்பவர் – 'அவ்யக்தர்'

உச்சஸ்தாயி போன்ற மூன்று ஸ்தானங்களையும் எட்ட இயலாதவர் 'ஸ்தான ப்ரஷ்டர்'

ஸ்தானங்கள் கட்டுப்பாடு இல்லாமல் பாடுபவர் 'அவ்ய வஸ்திதர்'

ஒன்றோடு மற்ற ராகங்களைக் கலந்து பாடுபவர் 'மிக்ரகர்'

மேல்ஸ்தாயிகளில் அஜாக்கிரதையாக சஞ்சரிப்பவர் 'நிர் முக்தர்'

மூக்கால் பாடுபவர் 'ஸானுநாசிகர்'

இப்படி 24 வகைப் பாடகர்கள் உண்டென்று சங்கீத சாஸ்திரம் சொல்கிறது.

சங்கீதத்தை ரசிக்கத் தெரியாதவர்கள் இந்த விபரங்களை மனதில் வைத்துக்கொண்டு போனால்...

சங்கீத வித்துவான்களையாவது ரசித்துவிட்டு வரலாம்.


நானும் என்னுடைய நண்பர் ஒருவர் ஒரு கச்சேரிக்குப் போனோம்.

"இப்பொழுது பாடப்போகிறாரே வித்துவான்... இவர் பாடினால் நாள் முழுவதும்கேட்டுக்கொண்டே இருக்கலாம்" என்றார்.

"அவ்வளவு நன்றாகப் பாடுவாரா?" என்றேன்.

"அப்படியில்லை... அவர் பாட ஆரம்பித்தால் அவ்வளவு சீக்கிரத்தில் முடிக்க மாட்டார். அதனால்தான் அப்படிச் சொன்னேன்." என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*




செலான் வங்கியின் தலைவர் உட்பட மூவர் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர். தலைவர் ஈஸ்ட்மன் நரங்கொட, இயக்குநர் ஓய்வுபெற்ற ரியல் அட்மிரல் பி.ஏ.கே.பீரிஸ், பொது முகாமையாளர் அஜிர பஸ்கல் ஆகியோரே நேற்று யாழ்.வந்தனர். யாழ். வந்த குழுவினரை செலான் வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் ஏ.எஸ்.அரவிந்தன் வரவேற்று அழைத்துச் செல்வதையும் பணியாளர்களுடன் இயக்குநர் சபை உறுப்பினர்களையும் படங்களில் காணலாம். யாழ்.வந்த குழுவினர் நெல்லியடி, மானிப்பாய் மற்றும் சங்கானைப் பகுதிகளில் செலான் வங்கியின் கிளைகளை அமைப்பது தொடர்பிலும் ஆராய்ந்துள்ளனர்.

## மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இன்று யாழ். செயலகத்தில் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டில் மீன் பிடித் தடை அகற்றப்படாத கடல் பகுதிகளுக்கு கடற்றொழிலுக்கு அனுமதிப்பது தொடர்பில் ஆராய்வதற்கான விசேட மாநாடு இன்று யாழ் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் மீனவர்களின் பிரச்சினைகள்தொடர்பில் ஆராய்வற்கான மாநாடு நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் மீன்பிடி, நீரியல் வள அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தலைமையில் இடம்பெற்ற போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ் அறிவிப்பை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், யாழ் குடா நாட்டில் மீன் பிடித்தடை நீக்கப்படாமலுள்ள மாதகல் உள்ளிட்ட கடல் உயர் பாதுகாப்பு வலயங்களின் கடற்றொழிலுக்கு அனுமதிப்பது தொடர்பில் ஆராய்வதற்கு மீன்பிடி நீரியல் வள அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தலைமையில் இன்று யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் வட பிராந்திய கடற்படைத்தளபதிகள் உட்பட பாதுகாப்பு தரப்பை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொள்வர்.

எனவே ஒவ்வொரு மீனவ சமாசத்திலிருந்து ஒருவர் இம் மாநாட்டிற்கு வருகை தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்தார். (ச-5)

## யாழ். கடலுணவுப் பொருட்கள் இன்று கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் கடலுணவு வகைகளை தென்பகுதிக்கு கூலர் வாகனங்கள் மூலம் ஏற்றுமதி செய் யும் நடவடிக்கை இன்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இவ் வைபவம் மீன்பிடி நீரியல் வள அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தலைமையில் இன்று சீநோரில் நடைபெறவுள்ளது.

இதில் இரண்டு கூலர் வாகனங்களில் கட லுணவுகள் ஏற்பட்டு ஏ-9 வீதியூடாக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அத்துடன் இன்று முதல் யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் கடலுணவு வகைகள் நிரம்பலுக்கு ஏற்றவகையில் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது. (ச-5)

## இராசி பலன்

11.07.2009
(ஆனி 27, சனிக்கிழமை)
சதுர்த்தி முன்னிரவு 10.04 மணிவரை
அவிட்டம் முற்பகல் 9.19 மணிவரை
இராகுகாலம் 8.59-10.29 மணிவரை
சுபநேரம் 2.59-4.29 மணிவரை
சங்கட சதுர்த்தி விரதம்
சித்தாமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனதானிய சேர்க்கை, போசன சுகம், கலந்துரையாடல். |
| இடபம் | பெரியோரால் மதிக்கப்படுதல், செய்தொழில் -முன்னேற்றம், இஷ்ட சித்தி, தேகநலன். |
| மிதுனம் | உத்தியோக பங்கம், எதிர்பாராத செலவு, தேவையற்ற பயம், முயற்சி தாமதம். |
| கடகம் | பொருள் விரயம், மனக்கவலை, எதிர்பாராத பகை, காரிய தடங்கல். |
| சிங்கம் | மனோ தைரியம், சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய சித்தி, விருந்துபசாரம். |
| கன்னி | தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கிய நிலை, புதிய திருப்பம், போசன சுகம். |
| துலாம் | புத்திரரால் கவலை, அஜீரண ரோகம், காரிய இடையூறு, திடீர் நன்மை. |
| விருச்சிகம் | கடின முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, சுபசெய்தி, ஆரோக்கியக் குறைவு. |
| தனுசு | மாதர் நட்பு, இஷ்டசித்தி, அந்நியர் சந்திப்பு, பொருள் சேர்க்கை. |
| மகரம் | மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, வாக்கு மேன்மை, ரோக நிலை. |
| கும்பம் | வெகுமானம், போசன சுகம், கற்பனை மிகுதி, கௌரவமான நிலை. |
| மீனம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், தனவிரயம். |

வளவன்

## மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு டிஜிற்றல் கடிகாரம்!

### டயலொக் வழங்குகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்தில் டிஜிற்றல் கடிகாரம் அமைப்பதற்கு டயலொக் நிறுவனம் முன்வந்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். நகர மணிக் கூட்டுக் கோபுரம் நீண்டகாலமாக கடிகாரம் பொருத்தப்படாமல் உள்ளதனையடுத்து தாம் டயலொக் நிறுவனத்திடம் கேட்டபோது அவர்கள் டிஜிற்றல் கடிகாரம் பொருத்துவதற்கு முன்வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்காக டயலொக் நிறுவனத்தை சேர்ந்த இரு பொறியியலாளர்கள் இன்று யாழ் வந்து மதிப்பிடு செய்யவுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ச-5)

## குறுநாவல் வெளியீட்டு விழா

(நெல்லியடி)

நெல்லை லதாங்கியின் அன்புடை நெஞ்சம் குறுநாவல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் சி. சத்தியசீலனும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-14)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 60 |
| தக்காளி | 250 | 300 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 60 |
| கோவா | 160 | 170 | -- |
| கரட் | 20 | 60 | 80 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 40 | 50 | 20 |
| வாழைக்காய் | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 70 | 70 | 60 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 30 |
| கரணைக் கிழங்கு | 70 | 80 | -- |
| பயிற்றங்காய் | 60 | 80 | 60 |
| லீக்ஸ் | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 30 | 50 | 40 |
| கறிமிளகாய் | 50 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 350 |
| கீரை – 1 பிடி | 10-20 | 15 | 10 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20-25 | 25-30 | 25 |

# 30 ஆண்டுக்கு முன் உங்கள் யோசனை துளிர்த்திருந்தால் 80 ஆயிரம் தமிழர்கள் பலியாகியிருக்க மாட்டார்கள்

## கலைஞர் கருணாநிதிக்கு ஆனந்த விகடனில் பகிரங்க கடிதம்



30 ஆண்டுகளுக்கு முன்னால் உங்களின் யோசனை துளிர்த்து இருந்தால் 80 ஆயிரம் அப்பாவித் தமிழர்களை சிங்களவர்கள் கொன்று இருக்க மாட்டார்கள். புலிப் படையில் 30 ஆயிரம் பேர் உயிர் பலியாக வேண்டிய அவசியம் வந்து இருக்காதே! கொழும்பில் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள் என்ற தகவல் கிடைத்ததும் அன்றைய ஜெயவர்த்தனாவுக்குத் தந்தி அனுப்பி கோரிக்கை மட்டும் வைத்து இருந்தால் பௌத்தர்கள் கோபம் அதிகமாகி இருக்காது.

இவ்வாறு தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் 'விகடன்' குழுமத்தின் 'ஆனந்த விகடன்' வார இதழில் கருணாநிதிக்கு பகிரங்க கடிதப் பகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பகிரங்க கடிதத்தின் முழு விபரம் வருமாறு,

தி.மு.க. தலைவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிழல் தலைவர், முத்தமிழ் அறிஞர், முதல்வர் கலைஞர் அவர்களுக்கு வணக்கம்!

மூத்த தமிழ்க்குடியின் நலனுக்காக ஐந்து முறை 'முள் கிரீடம்' தாங்கி, முத்து விழா தாண்டிய பிறகும் உழைத்து வரும் உங்களுக்குத் தொடக்கத்திலேயே ஒரு தகவலைச் சொல்ல வேண்டும். கடைசியாக ஒரு கேள்வியை வைத்து இருக்கிறேன்.

'நீ இன்றி நான் இல்லை' படத்துக்குத் கதை வசனம் எழுதுவதில் மும்முரமாகிவிட்டீர்கள். அது ஜெயலலிதா பல ஆண்டுகளுக்கு முன்னால் எழுதி வெளியிட்ட நெடுங்கதையின் தலைப்பு 'கருணாநிதி என் புத்தகத் தலைப்பை திருடி விட்டார்' என்ற அந்தம்மா அறிக்கை விடுவதற்கு முன்னால் உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியது என் கடமை. அதிருக்கட்டும்...

"போரிலே கலந்து வாகை மாலை சூட வாரீர் தோழர்களே! பாண்டியன் பரம்பரையினரே! சேரன் சந்ததியினரே! சோழனின் சொந்தக் காரரே! வாரீர்! கறுத்த கழுதையே, அங்கே ஏன் கனைக்கிறாய் என்று கேட்டிட வாரீர்! பிரிவினை வேண்டாமெனும் பெரும் உபதேசம் செய்யும் நரிகளின் ஊளையை, கிலி பிடித்த மனிதர்களைக் கீறி எறியுங்கள்!" என்று கோவில் பட்டியிலும்...

"உணர்ச்சியுடன் எழுதுபவர்களின் கட்டை விரலை வெட்டு என்று முழக்கமிடுகிறது ஒரு வாய். ஆட்சி பலத்தினால் கட்டை விரல்களைப் போக்கினால் போக்கட்டுமே! விரல் போனால் வாய் இருக்கிறது. அண்ணா சொன்னது போல இயக்கப் பேச்சாளர் அத்தனை பேர் நாக்குகளையும் துண்டித்துக் கொள்ளட்டும். கரங்களை நறுக்கி, நாவினைத் துண்டித்து நிர்க்கதியாக விட்டாலும் எமது தன்மானம். இன முழக்கம் ஓயாது, ஒழியாது. இதைக் காமராஜர்கள் உணர வேண்டும்' என்று கோவையிலும் ஒரு காலத்தில் கொந்தளித்த உங்களது நாக்கு கடந்த வாரம் சட்ட சபையில் பேசியதைப் படித்ததும் தான் பதறிப் போனேன். உங்களுக்கு பகிரங்க மடல் எழுதத் தூண்டியது நீங்கள் பேசிய அந்த வரிகள் தான்.

சம்பத்தும் நெடுஞ்செழியனும் அன்பழகனும் கழக மேடைகளில் (உங்கள் மொழியில்) தத்துவத் தாலாட்டுப் பாடிக்கொண்டு இருந்த போது... எரிமலையாக, இடி ஒலியாக, கரகர தொண்டையில் நீங்கள் கனல் கக்கியதால் ஆயிரக்கணக்கான தொண்டர்களின் கவனிப்பைப் பெற்றீர்கள், சரியா? இப்போது ஈழத் தமிழர் தொடர்பான விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசியதை திரும்பத் திரும்பப் படித்தேன். "எதிலும் ஒரு நீக்குப் போக்கு வேண்டும் என்பார்கள். அங்கு இருக்கும் தமிழருக்கு நன்மை செய்ய வேண்டுமானால் இங்கே நாம் ஆத்திரத்தோடு அல்லது வெறுப்பு உணர்வோடு, அங்குள்ள சிங்கள இனத்தின் மீது ஒன்றைச் சொல்லி அது வேறுவிதமான விளைவுகளை உண்டாக்கினால்... அது நல்லதல்ல! பேசும் போது சுவையாக இருக்கும். வீரமாகப் பேசலாம். சூறாவளிப் பேச்சு, புயல் பேச்சு, கடல் அலைப் பேச்சு, எரிமலைப் பேச்சு என்று புகழாரம் சூட்டலாம். ஆனால், சிங்களவர்களுடைய கோபத்தை அதிகமாக ஆக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதைத்தான் நீக்குப் போக்கு என்று சொன்னேன்" என்று பேசி இருக்கிறீர்கள். என்னவொரு வளைவு, குழைவு, நெளிவு!

30 ஆண்டுகளுக்கு முன்னால் உங்களது இந்த யோசனை துளிர்த்து இருந்தால், 80 ஆயிரம் அப்பாவித் தமிழர்களை சிங்களவர்கள் கொன்று இருக்க மாட்டார்கள். புலிப் படையில் 30 ஆயிரம் பேர் உயிர் பலியாக வேண்டிய அவசியம் வந்து இருக்காதே! கொழும்பில் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள் என்ற தகவல் கிடைத்ததும், அன்றைய ஜெயவர்த்தனாவுக்குத் தந்தி அனுப்பி கோரிக்கை மட்டும் வைத்து இருந்தால், பௌத்தர்கள் கோபம் அதிகமாகி இருக்காது.

ஆனால், நீங்கள் தான் 'தமிழனுக்கு ஒரு நாடு, தனித் தமிழீழ நாடு' என்று கரகரக் குரலால் நித்தமும் கர்ஜித்தீர்கள். இரத்தக் கறை படிந்த ஜெயவர்த்தனாவின் கொடூரத்தைத் தமிழ் நாட்டுத் தெருவெல்லாம் சொல்லி, மக்கள் கொடுத்த எம்.எல்.ஏ. பதவியை இராஜினாமா செய்து... பிறந்த நாளுக்குக் கிடைத்த பணத்தைப் போராளிகளுக்குத் தூக்கிக் கொடுத்து, விடிய விடிய டெசோ ஊர்வலங்கள் நடத்தி, மனிதச் சங்கிலி நடத்தி, கறுப்புச் சட்டை போட்டு, டெல்லிக்கு காவடி தூக்கி, ஆட்சியை பறிகொடுத்து... என பாழாய்ப் போன ஈழத் தமிழனுக்காகக் காலத்தை வீணாக்கிவிட்டீர்களே, தலைவரே!

எம்.ஜி.ஆர். நாலு கோடி ரூபாயைத் தூக்கிக் கொடுத்துப் பிரபாகரனைத் தட்டிக் கொடுத்தார். "இந்தச் சண்டையை நடத்துவதே எம்.ஜி.ஆர்-தான்" என்று ஜெயவர்த்தனா பேட்டி அளிக்கும் அளவுக்கு ஆர்வம் காட்டினார். கை நிறைய கரன்சியை அவரும் வாய் நிறைய வார்த்தைகளை நீங்களும் அள்ளி எறிந்ததால்தான் போராளி இயக்கங்கள் 'நம் பின்னால் தமிழ் நாடே இருக்கிறது' என்று திரிந்தன.

"கனக விசயர் தலையில் கல்லேந்திக் கொண்டு வந்தான். செங்குட்டுவன் காவிரிக்குக் கரை கட்ட பன்னீராயிரம் சிங்களவர்களைக் கைதிகளாகக் கொண்டு வந்தான். கரிகாலன். இதெல்லாம் சரித்திரம். ஆனால், அந்த சரித்திரத்தின் விழுதுகளாக நாம் இருக்கிறோமா? இனிப் பழங்கதை பேசிப் பயனில்லை. செயலில் இறங்க வேண்டும். ஆளுக்கு ஓர் ஆயுதத்தைத் தூக்குவதா என்று கேட்பீர்கள்? அப்படி ஒரு நிலை வந்தால் கட்டிக்கழிக்க முடியாது. ஆனால், அந்தக் காலம் இன்று வந்துவிடும் என்றும் என்னால் சொல்ல முடியவில்லை" என்று நீக்குப் போக்குத் தெரியாமல் எரிமலைப் பேச்சை நீங்கள் பேசியதால் கோபமான பௌத்தர்கள் கொழும்புத் தமிழர்களை வடக்குப் பக்கமாக விரட்டியதாகச் சொல்லலாமா?

இலங்கையில் எங்கள் அக்கா, தங்கை, அண்ணன், தம்பி, எங்களைப் பெற்றெடுக்காத தாய் - தந்தையர் எல்லாம் சிங்கள வெறியர்களால் கொல்லப்படுகிறார்கள். இதை எல்லாம் நாங்கள் சகித்துக் கொண்டு எத்தனை நாளைக்கு இருப்பது? நாங்கள் ஒட்டிக் கொண்டு இருக்க, இந்தியாவோடு இணைந்து இருக்க, இந்தியா வேறு... தமிழ் நாடு வேறு என்று இல்லாமல், இந்தியாதான் தமிழ்நாடு, தமிழ்நாடுதான் இந்தியா என்று கருதிக் கொண்டு இருக்க நீங்கள் தமிழருக்குச் செய்தது என்ன? உங்களுடைய தேசியம் தமிழ் நாட்டுக்கு வேகமாக வரத் தயக்கம் காட்டுவது ஏன்? உங்களுடைய தேசியம் தமிழக எல்லைக்கு அப்பால் நின்று விடுகிறதே, என்ன காரணம்? இவற்றைக் கேட்கக் கூடாதா? கேட்டால் பிரிவினையா?" என்று அன்றைய பிரதமர் ராஜீவைக் கோபப்படுத்தாமல், புயல் பேச்சு பேசாமல் இருந்தால், அவராவது கோபப்படாமல் நல்லது ஏதாவது செய்திருப்பாரே?

இன்றைய வைகோ, நெடுமாறன், நாஞ்சில் சம்பத்தைவிட அதிகமாக அன்றைய அமைச்சர்கள் காளி முத்துவும் எஸ்.டி. சோமசுந்தரமும் பேசினார்களே! "இந்தியா படை எடுக்க வேண்டும்", 'ஜெயவர்த்தனாவைத் தூக்கிவிட வேண்டும்' என்றார்கள். காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்ட சபையில் இதை முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் போட்டுக் கொடுத்தார்கள். புறநானூற்றுப் பாடல்களை ஒப்பிக்காத, கணைக்கால் இரும்பொறையின் மறம் அறியாத எம்.ஜி.ஆர். சிரித்துக் கொண்டே சொன்னார். "அவர்கள் பேசியது என்னுடைய கருத்துதான். அவர்கள் அளவுக்கு எனக்கு வீரமாகப் பேச வரவில்லை"

பேச்சு என்பது வெறும் பேச்சுதானே என்பதை உணர்ந்தார் எம்.ஜி.ஆர். அதனால் தான் நீங்கள், "மிசாவைக் காட்டி மிரட்டினால் தமிழகத்துக்கள் வர விசா வாங்க வேண்டி வரும்" என்ற போதும் கவலைப்படாமல் இருந்தார். அன்று நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தீர்கள். இன்று அதிகார நாற்காலியில் அமர்ந்து இருக்கிறீர்கள். பிடிக்காததை யார் பேசினாலும் வேண்டாத வீரமாகத் தெரிகிறது.

பல்லாயிரம் அழிவுகள் ஆன பிறகு நீங்கள் சொல்கிறீர்கள். சிங்களவனைக் கோபப்படுத்த வேண்டாம் என்று! முதலில் இங்கு உள்ள மத்திய அரசைக் கோபப்படுத்த வேண்டாம் என்றீர்கள். அதுவாவது உங்களால் தவிர்க்க முடியாத கூட்டணி தர்மம். கூடவே சிங்களவர்களைக் கோபப்படுத்த வேண்டாம் என்ற இலங்கைத் தூதர் அம்சாவாக நீங்கள் பேசுவது எந்த ஊர் நியாயம்?

வெள்ளை பொஸ்பரஸ் தூவுகிறான். கிளஸ்டர் போடுகிறான். கொத்துக்குண்டுகள் மொத்தமாக விழுந்து கொண்டு இருக்கும் போது உங்கள் அதிகாரத்தை வைத்துத் தடுக்ககூடாதா? என்றால் 'என்னால் என்ன செய்ய முடியும் மத்திய அரசுதான் தடுக்க முடியும்' என்று தட்டிக் கழித்தீர்கள். 'போர் நடத்துவதன் பின்னணியில் இந்தியாதான் இருக்கிறது' என்ற போதும் மறுத்தீர்கள். அதை பிரதமர் மன்மோகன் ஒப்புக் கொண்ட போது காதை மூடிக் கொண்டீர்கள். இப்போது 'மத்திய அரசு என்ன செய்ய முடியும் சிங்கள அரசுதானே எதையும் செய்ய முடியும்' என்று பந்தை கடல்தாண்டித் தட்டிவிட்டீர்கள்.

நீதியரசர்கள் ஏழு பேரை வைத்து நீங்கள் ஆரம்பித்த இலங்கைத் தமிழர் உரிமைப் பாதுகாப்பு இயக்கத்துக்கு இன்னும் உயிர் இருக்கிறதா என்று தெரியவில்லை. இலங்கைக்குப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். போர்க் குற்றத்தை உலக நிதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை அவர்கள் டெல்லிக்கு பறந்து போய் ஜனாதிபதிக்கும் சொக்கத் தங்கம் சோனியாவுக்கும் கொடுத்தார்களே நினைவிருக்கிறதா? இப்போதைய உங்கள் சித்தாந்தப்படி அதுகூட தப்பானதல்லவா? கோரிக்கைகளை யாருக்கும் தெரியாமல் வாபஸ் வாங்கிவிடுங்கள்!

இலங்கைப்பிரச்சனையில் உங்கள் கருத்து என்ன?

"மத்திய அரசின் கருத்துத்தான் என் கருத்து."

தமிழீழம் குறித்து உங்களது கருத்து என்ன?

"இந்த விடயத்தில் மார்க்சிஸ்ட் கட்சியின் கருத்து தான் என் கருத்து"

பிரபாகரனை உயிரோடு பிடித்தால் எப்படி நடத்த வேண்டும்?

"ஜெயலலிதா தீர்மானம் போட்டபடி இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும்."

உங்களுக்கு என்று இப்போதெல்லாம் எந்த சொந்தக் கருத்தும் கிடையாதா? 'தமிழீழம் கிடைத்தால் மகிழ்ச்சி அடையும் முதல் ஆள் நான்தான், இலங்கையில் தமிழர் அரசு அமைந்தால் சந்தோஷம்' என முற்றும் துறந்த முனிவர் போலத் தத்துவம் பேசுவது உதவுமா? நீங்கள் அனைத்துக் கட்சிக் கூட்டம் போட்டது முதல் மே இரண்டாவது வாரம் வரை, எட்டு மாதங்கள் நத்தை போல நகர்ந்ததில் நசுங்கிய உயிர்களின் எண்ணிக்கை 80 ஆயிரம். எட்டுத் தடவை தீர்மானம் போட்டு என்ன செய்ய முடிந்தது? "நாங்கள் போரின் அன்றாடத் தகவல்களைத் தினமும் இந்தியாவுக்குச் சொல்லி வந்தோம்" என்று கோத்தபாய ராஜபக்ஷ சொன்ன பிறகும் காங்கிரசைச் சட்டையைப் பிடித்துக் கேள்வி கேட்க முடியாமல் உங்களைப் பிடித்து இழுத்தது எது? அல்லது யார்?

"நாங்களே அடிமையாக இருக்கிறோம். ஓர் அடிமை இன்னோர் அடிமைக்கு எப்படி உதவி செய்ய முடியும்?" என்று ஈழத் தந்தை செல்வாவிடம் இங்கிருந்த தந்தை பெரியார் சொன்னதாக நீங்களும் தப்பிக்கப் பார்க்கிறீர்கள். உடல் வலியெல்லாம் தாங்கிக்கொண்டு மூத்திரப் பையைத் தூக்கிக்கொண்டு கடைசிக் காலத்திலும் கருவறைப் போராட்டம் நடத்திய 'தமிழின அடிமை' அவர். கடைசி வரை அதிகாரம் கொண்ட பதவி எதையும் திரும்பிக் கூடப் பார்க்காத அடிமை அவர். ஆனால் நீங்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சர். 14 ஆண்டுகள் உங்களது ஆட்கள் மத்திய லகானைச் சுழற்றி வந்திருக்கிறார்கள்.

சோனியா உங்களைத்தகப்பன் ஸ்தானத்தில் வைத்து மதிக்கிறார். கேட்ட பதவிகள் கிடைக்கின்றன. மத்திய மந்திரிகள் யார் வந்தாலும் கோபாலபுரத்தில் தான் லாண்ட் ஆகிறார்கள். நீங்கள அடிமை என்றால் கொத்தடிமைகளை என்னவென்ற அழைக்கலாம்? அண்ணா தனி நாடு கைவிட்ட கதையைச்சொல்லிச் சொல்லி அண்ணாவும் அப்படித்தான் என்று இன்றைய தலைமுறைக்குக் காட்டிக்கொடுக்கிறீர்கள். எதற்கெடுத்தாலும் பெரியார் அண்ணா பெயரைச் சொல்லி ஏன் பலியிடுகிறீர்கள்? கச்சத்தீவைத் தாரை வார்க்கும் போது கடிதம் மட்டும் அனுப்பியதால் இன்று கண்காணிப்புக் கோபுரம் வந்து விட்டது. காவிரியில் தண்ணீர் விடுவதில் உச்ச நீதிமன்றம் தொடங்கி காவிரி ஆணையம் வரை தீர்ப்பளித்த பிறகும் விரும்பினால்தான் தண்ணீர் தருவோம் என்று சொல்லும் நிலையே இன்னமும் தொடர்கிறது.

தெற்காசியாவின் அதிசயமாக பென்னிகுக் அமைத்த முல்லைப் பெரியாறு அணையை மார்க்சிஸ்ட் மந்திரி குடைவைத்து தட்டிப் பார்க்கிறார். கீறல் விட்டு உள்ளதா இல்லையா என்று.

முதலமைச்சர் அச்சுதானந்தனுக்கு ஆயிரம் தலைவலிகள் இருப்பதால் அவருக்கு கோபம் வருவது மாதிரி எதையாவது சொல்லிவிடாதீர்கள். பாலாறு பிரச்சினையைக் கிளற வேண்டாம். மாவோயிஸ்ட்டுகளை ஆந்திர அரசு அடக்கி முடித்த பிறகு ஆற அமரப் பேசலாம். எந்தத் திகதியில் எந்த ஒப்பந்தம் போட்டோம் என்று மனப்பாடமாக துரைமுருகன் ஒப்பிக்க மட்டும் தான் காவிரியும் பாலாறும் முல்லைப் பெரியாறும் பயன்படப்போகிறது.

"பஞ்சாப் பொஸ்பரஸ், காஷ்மீர் கற்பூரம், அசாம் அணையாவிளக்கு, ஈர விறகு இங்குள்ள தமிழினம்" என்று புதுக் கல்லூரி விழாவில் 20 ஆண்டுகளுக்கு முன் புது விளக்கம் கொடுத்தவர் நீங்கள். விறகை ஈரமாகவே வைத்திருக்கலாம் என்று இப்போது நீங்களாகவே சொல்கிறீர்களே... அதை எதில் சேர்ப்பது? கடைசியாக இன்னொன்றும் நினைவுச் சரத்தில் நெருடுகிறது...

ஈழத்தில் இருந்து அகதியாக வெளியேறி நிர்க்கதியாக நின்ற ஒரு சிறுவனை, கால் நூற்றாண்டுக்கு முந்தைய ஒரு தி.மு.க. மாநாட்டின் போது ஆயிரக்கணக்கான தொண்டர்கள் முன்னிலையில் "நானே இவன் மகன் போல வளர்க்கப் போகிறேன். என்னுடனே இவன் இருப்பான்" என்று அறிவித்தீர்கள். அந்தக்கடல் அலைப் பேச்சில் மாநாட்டு மைதானமே கசிந்து மிதந்ததே! அந்த பரிதாப ஜீவன் இப்போது எங்கே, தலைவரே?

**அன்புடன்**
**ஈரவிறகாக இருக்க முடியாத**
**அரசியல் அறியாத் தமிழன்!**

# சங்காபிஷேகம்

(சித்தன்கேணி)

சித்தன்கேணி பெரியவளவு மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 1008 சங்காபிஷேகமும் மாலை விசேட பூசையும் சுவாமி வீதி வலம் வருதலும் இடம்பெறவுள்ளது. (ஓ-17)

# சிறுவர் மகிழ்வகத்தினால் சிறுவர் பூங்கா அமைப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களின் நலன்கருதி சிறுவர் மகிழ்வக நிறுவனத்தினரால் கோப்பாய் இராஜ வீதியில் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப் பூங்காவில் சிறுவர்களுக்கான விளையாட்டு மைதானம், நூலகம் போன்றவையும் அமைக்கப்பட்டுள்ளன. தரம் 2 தொடக்கம் 6 வரை கல்வி பயிலும் மாணவர்கள் இச் சிறுவர் பூங்காவை பயன் படுத்தலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஓ-134)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் விக்னேஸ்வரா ஞானக்குழந்தையின் 17 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மைதானத்தில் பாடசாலை பொறுப்பாசிரியர் திருமதி சிவானந்தராணி ஸ்ரீ தரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.செலிங்கோ காப்புறுதிக் கம்பனி முகாமையாளர் சே. தவசீலன் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக கோண்டாவில் இந்து மகாவித்தியாலய உப அதிபர் இ. அருணகிரிவாசன், கௌரவ விருந்தினராக பாலர் கல்விக்கழக தலைவரும் , சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியருமான எஸ்.பி.காசிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் யாழ்.ஞானக்குழந்தை இல்லத்தின் 17ஆவது வருடாந்த விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு வள்ளுவர் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் பாடசாலை பொறுப்பாசிரியர் திருமதி சத்தியதேவன் வளர்மதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலைஇரத்தவங்கி பிரிவின் வைத்திய அதிகாரி இ.சிவசங்கர், யாழ். சுகாதாரப் பணிமனை,தாய்சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் சி.திருமகள் ஆகியோர் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் - க.விமலநாதன், கௌரவ விருந்தினர்களாக பாலர் கல்விக் கழக உப தலைவர் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன், வண்ணார்பண்ணைJ /98 கிராம உத்தியோகத்தர் திருமதி ரேணுகா நகுலன், வள்ளுவர் சனசமூக நிலைய செயலாளர் நா. கனகராசா, வண்ணார்பண்ணை மாதர் சங்கத்தலைவர் திருமதி ஸ்ரீ.தீபா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

# சதோச விற்பனை நிலையத்திற்கு அமைச்சர் குழு விஜயம்



(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சதோச) யாழ்ப்பாணத்தில் மீண்டும் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்படுமென நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையிலான அமைச்சர் குழு வின்சர் தியேட்ரில் இயங்கிய கூட்டுறவு விற்பனை நிலையத்தை பார்வையிட்ட பின்னர் அமைச்சர் பந்துல குணவர்த்தன இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.நகர் வின்சர் தியேட்டர் கட்டடத்தில் முன்பு இயங்கிய சதோச விற்பனை நிலையத்தை பார்வையிட்ட அமைச்சர் பந்துல குணவர்ததன தலைமையிலான குழுவினர் அக் கட்டடத்தை நவீன முறையிலான விற்பனை நிலையமாக எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் திருத்தியமைக்குமாறு அரச நெறியாளருக்கு அறிவுறுத்தினார்.

அத்துடன் சகல அத்தியாவசியப் பொருட்களும் கட்டடப் பொருட்களும் சதோசா மூலம் கொழும்பு விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுமென நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அரச வர்த்தகக் கூட்டுறவுத் தாபனத்தற்கு (எஸ்.ரி.சி) சென்று பார்வையிட்ட அமைச்சர் குழு அங்கு மேலும் பல பொருட்களை நியாய விலையில் விற்பனை செய்ய விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அதன் முகாமையாளர் சுரேஷ் குமாரிடம் உறுதியளித்தனர். (5)

# நாடகமும் அரங்கியலும் பாடத்தினை பயில்வோருக்கான இருநாள் கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் க.பொ.த உயர்தரம் கலைமுதற் தேர்வு போன்றவற்றில் நாடகமும் அரங்கியலும் பாடத்தினைப் பயில்வோரின் அரங்கியல் அறிவினை ஆழப்படுத்தும் நோக்கோடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இருநாள் கருத்தமர்வு இன்றும் நாளையும் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை 286 பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

நாடகமும் அரங்கியலும் துறைசார்ந்த விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் அரங்கியல் அனுபவமுடைய புலமையாளர்கள் ஆகியோரைக் கொண்டு நடத்தப்படவுள்ள இக் கருத்தமர்வில் நாடக எழுத்துருவாக்கம், "அன்ரிக்கனி" நாடகம்- ஒரு பார்வை, கிரேக்க உரோமைய நாடக வரலாறு, மத்திய கால ஐரோப்பாவில் நாடகம் ,எலிசபெத்கால இங்கிலாந்தில் நாடகம், ஷேக்ஸ்பியரின் "ஒத்தெல்லோ" - ஒரு பார்வை, சிங்கள அரங்கு, ஷேக்ஸ்பியரின் "யூலியசீசர்" - ஒரு பார்வை, 18 ஆம் நூற்றாண்டுக்கு பின்னான ஐரோப்பிய அரங்கு, அரங்க நடிப்பு, நெறியாள்கை, தமிழ் நாடக வரலாறு, "அலங்காரரூபன்", நாட்டுக்கூத்து - ஒருபார்வை,அரங்கில் இசையமைப்பு -ஓர் அனுபவப் பகிர்வு, அரங்கின் காண்பியங்கள் (காட்சி–ஒளி) போன்ற தலைப்புக்களில் கருத்துரைகள் இடம்பெறவுள்ளது.

கருத்துரைகளை குழந்தை ம.சண்முகலிங்கம் அ.ம.ரவீந்திரன், மா.அருள்சந்திரன், க.திவகநாதன், அ.விஜயநாதன், யோ.யோண்சன் ராஜ்குமார், க.ரதீதரன், கோ.சத்தியன், எ. வைதேகி ஆகியோர் வழங்கவுள்ளார்கள். (ஓ)

# சிறுவர்களுக்கான இலவச வகுப்புகள்

நல்லூர் சிறுவர் மகிழ்வகத்தினால் சிறுவர்களுக்கான இலவச சிங்களம், ஆங்கில வகுப்புக்களும் கணணி பயிற்சியும் ஆரம்பிக்கப்படவுள்ளது.


இவ் வகுப்புக்களில் தரம் 3 தொடக்கம் 6 வரை கல்வி பயிலும் மாணவர்கள் இணைந்து கொள்ளலாம். இவ் வகுப்புக்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் வார நாட்களில் மாலையிலும் நடைபெறவுள்ளது. இணைய விரும்பும் மாணவர்கள் நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள அலுவலகத்தில் விபரங்களைப் பெற்று இணையுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-134)

# மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

வலி.கிழக்கு பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப் போட்டியில் பங்குகொள்ள விரும்புவர்கள் வலி கிழக்குப் பிரதேச சபை உப அலுவலகங்களான புத்தூரிலோ, நீர்வேலியிலோ பதிவ்செய்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-134)





அட்பெண்டிஸ் சர்வதேச பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட சுகாதார இணைப்பாளர் வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராசா மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், மாணவர் ஒருவர் சத்தியப்பிரமாணம் செய்வதையும் படங்களில் காணலாம். (படம் நல்லூர் செய்தியாளர்)

# ஆன்மீக சொற்பொழிவு

சிவலிங்கயோக கேந்திரா நிலையத்தினால் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவ காலங்களில் தினமும் 5.30 மணிமுதல் 6.30 மணிவரை சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுவருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை மகாகவி ஆக்கிய மகாகாளி என்னும் விடயம் பற்றியும் நாளை ஞாயிற்றுக்கிழமை திருவாசகம் எனும் தேன் எனும் விடயம் பற்றியும் சிதம்பரநாதன் சசீவன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ஓ-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம்திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 4 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை – கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இரதோற்சவமும், 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (6-4)

# அலங்கார உற்சவம்

(இருபாலை)

நல்லூர் ஆடியபாத வீதி இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதில் 15 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், மாலை 4 மணிக்கு திருவூஞ்சல் இடம்பெற்று அம்பாள் தெருவீதியுலாவும் இடம்பெறும்.

இவ் உற்சவ காலத்தில் மாலை 6 மணிக்கு சிறப்புச்சொற்பொழிவுகளும் இடம்பெறுகின்றன. (ஓ-136)




# பல்கலைக்கழகத்துக்கு தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலிருந்து 2008 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் "Z" புள்ளி அடிப்படையில் 34 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இதில் கணிதத்துறைக்கு 5 பேரும், உயிரியல் துறைக்கு 4 பேரும், முகாமைத்துவத்துக்கு 3 பேரும், வணிகத்துறைக்கு ஒருவரும், கலைத்துறைக்கு 8 பேரும், நுண் கலைப்பீடத்திற்கு 13 பேரும், தெரிவாகியுள்ளதாக அதிபர் திருமதி எஸ்.அனந்த சயனன் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# வருடாந்த வேள்வி

தென்மராட்சி வரணி மாசேரி புராதன குருநாதர் கோவில் வருடாந்த வேள்வி இன்று சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. கடந்த மூன்றாந்திகதி ஆரம்பமான இவ்வாலய உற்சவம் நாளை வரை நடைபெறவுள்ளது. இறுதி நாளான சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு வளர்த்து நேருதல் நிகழ்வைத் தொடர்ந்து பொங்கல் இடம்பெறும். பின் படையல், கத்திமடை, விசேட பூஜைகள், சிவ கலை கொள்ளல், பரிகலம் வழிபடல்,திருவருட் பிரசாதம் வழங்கல் ஆகியன இடம்பெறவுள்ளது. (ஓ-134)

# நலன்புரி முகாம்களில் வாழும் மக்களை நடைமுறை வாழ்க்கைக்கு பழக்கப்படுத்திய பின்னரே மீளக்குடியமர்வு

## த.தே.கூட்டமைப்பும் தீர்வு யோசனையை முன்வைக்கலாம் என்கிறது அரசு

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்கள் 30 வருடகாலமாக பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் யுத்த மனநிலையுடன் உலகத்தை அறியாது வாழ்ந்து வந்தவர்களாவர்.எனவே நடைமுறை வாழ்க்கைக்கு பழக்கப்படுத்திய பின்னரே முகாம்களிலுள்ளவர்களை மீளக் குடியேற்ற முடியும் என்று அமைச்சரவையின் பேச்சாளரும் அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். ஜனாதிபதியும் அரசாங்கமும் ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்வினை காண்பதற்கே நாட்டம் கொண்டுள்ளனர். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தீர்வு தொடர்பான தமது யோசனைகளை முன்வைக்கலாம் என்றும் அவர் கூறினார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது.இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார் இங்கு மேலும் தெரிவிக்கையில், இடைத்தங்கல் முகாம்களில் 3 இலட்சத்திற்கும் மேலான மக்கள் தங்கியுள்ளனர். இவர்களில் முதியோர், நடுத்தர வயதுடையோர், சிறுவர்கள், குழந்தை கள் என பலதரப்பட்டோர் உள்ளனர்.சிறுவர்களில் பெருமளவிலானோர் பாடசாலைகளுக்கு சென்றதில்லை. சிறுவயதிலேயே கையில் ஆயுதங்களை ஏந்தியவர்கள். யுத்தச் சூழ்நிலையில் அந்த மானசீகத்தோடு வாழ்ந்தவர்கள்.உலக நடப்புக்களை அறியாதவர்கள்.

எனவே கல்வியை,அடிப்படை வசதிகளை, சுதந்திரமான வாழ்க்கை முறையை, உலக நடப்புக்களை அனைத்தையும் அம் மக்களுக்கு வழங்கிய பின்னரே அவர்களது சொந்த இடங்களில் குடியமர்ததப்பட வேண்டும். அதை விடுத்து, உடனடியாக இதனைச் செய்யமுடியாது. அவர்களும் மனிதர்களும் அவர்களுக்கும் கௌரவம் உண்டு.

ஜனாதிபதி அரசியல் தீர்விலேயே நாட்டம்கொண்டுள்ளார்.எனவே தமிழ்க்கூட்டமைப்பினர் தமது யோசனைகளை முன் வைக்கலாம். கருத்துக்களை வெளியிடலாம்.

இதற்கு செவிமடுக்கவும் பதிலளிக்கவும் அரசாங்கம் தயாராகவே உள்ளது. அரசியல் தீர்வு தொடர்பில் சிலர் வசனங்களையும் ஒரு சில வரிகளையும் எதிர்க்கின்றனர். இன்று 13 ஆவது திருத்தத்தில் சிலர் தொங்கிக் கொண்டுள்ளனர். அதிகாரப் பரவலாக்கலை ஜனநாயக ரீதியில் முன்னெடுப்போம். அதனை தன்னிச்சையாக செயற்படுத்தமாட்டோம்.

நாட்டை அபிவி ருத்தி செய்வதோடு வட பகுதியை மீளக்கட்டி யெழுப்புவதே அரசாங்கத்தின் இலக்காக உள்ளதே தவிர அமைச்சர்களுக்கு சுகபோக வீடுகளை அமைக்கும் திட்டமோ,அதற்கு நிதியோ ஒதுக்கப்படவில்லை. எனவே இதுதொடர்பில் வெளியான செய்திகளில் உண்மையில்லை என்று தெரிவித்தார். (ஓ-6)

## முகாம்களில் தங்கியுள்ள கனேடிய குடிமக்கள் எத்தனை பேர் ?

### இலங்கையிடம் கோருகின்றது கனடா

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் எத்தனை பேர் கனேடிய குடிமக்கள் என்பதையிட்டு உறுதிப் படுத்தக்கூடிய தகவலைத் தருமாறு இலங் கையிடம் கனடா கேட்டுள்ளது.

இதுதொடர்பாக கனேடிய வெளிவிவாகர அமைச்சு வட்டாரங்கள் தகவல் தருகையில் கனடாவைச் சேர்ந்த நால்வர் தடுத்து வைக் கப்பட்டிருப்பதாக தமக்கு தகவல் கிடைத்திருக் கின்ற போதிலும் அங்குள்ள இருவர் பற்றிய தகவல்களே உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தன. ஏனையவர்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப் பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கனேடிய குடிமக்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்துமாறு கொழும்பில் உள்ள கனேடிய தூதரகம் இலங்கை அரசைக் கேட்டுள்ளது என கனேடிய வெளிவிவாகரத்துறைப் பேச்சாளர் லோறா மார்க்கின் தெரிவித்தார். (ஓ-5)

## சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை கோரியுள்ள கடனை அமெரிக்கா தடுக்காது

### அமெரிக்க தூதரகத்தில் உயர் அதிகாரி ஜேம்ஸ் முரே தெரிவிப்பு


(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை அரசாங்கம் கோரியுள்ள கடன் உதவியை தடுக்கும் நோக்கம் அமெரிக்காவுக்கு எந்த வகையிலும் இல்லை.இவ்விடயம் தொடர்பில் தனிப்பட்ட ரீதியிலோ பகிரங்கமாகவோ எவ்வாறான நோக்கமும் இல்லை என்று இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் உயர் அதிகாரியான ஜேம்ஸ் முரே தெரிவித்துள்ளார் என வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித ஹேகனவை இலங்கைக்ான அமெரிக்க தூதரகத்தின் உயர் அதிகாரி யான ஜேம்ஸ் முரே கடந்த புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிறை வேற்று சபை முடிவெடுக்கும் என்றும் அதில் அமெரிக்கா உறுப்புரிமையை கொண்டுள்ளதாகவும் ஜேம்ஸ் முரே மேலும் குறிப்பிட்டுள்ளார்.கடன் வழங்கும் விடயத்தில் அரசி யல் விவகாரங்களை விடுத்து பொருளாதார விடயங்களே நிதியத்தின் நிறைவேற்று சபையினால் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்கா உள்ளிட் சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகள், இலங் கையின் கோரிக்கை தொடர்பில் பரிசீலனை செய்யும் எனவும் ஜேம்ஸ் முரே, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகனவிடம் தெரிவித்துள்ளார் என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஓ-6)



யுத்தத்தினால் இடம்பெயர்ந்து தற்போது நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கு உதவும் முகமாக யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தால் மாவட்ட செயலக ஊழியர்களிடமிருந்து பெறப்பட்ட ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 665 ரூபாவை அரச அதிபர் கே.கணேஷிடம் மேலதிக அரச அதிபர் (நிதி) சு.சண்முகரட்ணம் வழங்கு வதையும், அருகில் கழகத் தலைவர் ம.வித்தியானந்தநேசன், செயலாளர் கி.கருணாகரன், பொருளாளர் பி.இராகவன் ஆகியோர் நிற்பதையும், படத்தில் காணலாம் இந் நிதிக்கு அரச அதிபர் 10 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

# அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை



92

இதுபற்றிக் கேள்வியுற்ற ருத் ஆரம்பத்தில் ஆறுதல் அடைந்தாலும் பின் ஆத்திரம் கொண்டாள். டேவிட்டைத் தன்னிடம் திரும்பி வருமாறு கெஞ்சினாள். அவன் மறுக்கவே றோய் செய்த ஒழுங்கை எதிர்க்காமல் அப்படியே விட்டுவிட்டாள். ஒருவேளை டேவிட் தானாக மனம் மாறுவான் என்று எண்ணினாள் போலும்.

அவன் றோயுடன் வாழ்ந்து வந்த போது தான் மோட்டார் சைக்கிள் விபத்திலிறந்தான். அந்த மரணம் எல்லோருடைய இதயங்களையும் உடைத்து சின்னாபின்னமாக்கி விட்டது. எல்லோரிலும் பார்க்க றோய் மோசமாகப் பாதிக்கப்பட்டான். றோயும் டேவிட்டும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து அன்பால் பிணைக்கப்பட்டிருந்தனர். இதை ருத் புரிந்து கொள்ளவில்லை. அவள் ஒளமாவும் றோயும் அவனைக் கெடுத்துவிட்டனர் என்று குற்றம் சாட்டினாள். இறுதிவரையும் ருத் அவர்களை மன்னிக்கவேயில்லை.

சிலநாள் கழித்து ஒருநாள் ஒபாமாவும் ஒளமாவும் வீடு திரும்பிய போது அங்கு ஒரு கார் தங்களுக்காக காத்து நின்றதைக் கண்டனர். அதிலிருந்து இறங்கிய கார் ஓட்டி ஒளமாவிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். ருத் அனுப்பியிருந்தாள் மார்க் அமெரிக்காவிலிருந்து வந்துள்ளான். ஆகவே ஒளமாவையும் ஒபாமாவையும் மதிய போசனத்துக்கு அழைத்திருந்தாள். ஒளமா ஆறு மாதங்களுக்கு மேலாக நைரோபியிலிருப்பது ருத்துக்குத் தெரியும்.

ஆயினும் அவள் ஒளமாவைப் பற்றி எந்த அக்கறையும் காட்டவில்லை. இப்போது எங்கிருந்து இந்த ஆர்வம்? அவள் உண்மையில் ஒபாமாவை அழைத்துத் தன் மகன் மார்க்குடன் ஒப்பிட்டுப் பார்க்க விரும்புகிறாள் என்பது தான் ஒளமா தந்த விளக்கம். ஒபாமாவோ தான் கட்டாயம் போய் அவர்களைப் பார்த்து விருந்தில் பங்குகொள்ள வேண்டும் என்று விரும்பினார். ஒளமா கார் டிரைவரிடம் சுவாஹிலி மொழியில் ஏதோ பேசிவிட்டு இருவரும் விருந்துக்குப் போய் வரச் சம்மதித்தனர்.

வெஸ்றலாந்து என்ற பணக்காரர்களும் வசதி படைத்தவர்களும் வாழும் பகுதியில் ருத் வாழ்ந்தாள். வீட்டுக்குப் போனபோது நரைத்த முடியுடைய வெள்ளைக்காரப் பெண் ஒருத்தி வரவேற்றாள். ருத்துக்குப் பின்னால் ஒபாமாவின் வளர்த்தியையும் நிறத்தையும் உடைய ஆபிரிக்க ஆண் மகன் நின்று கொண்டிருந்தான். உள்ளே சென்றதும் வயதுபோன கறுப்பர் ஒருவர் இளம் பையனோடு விளையாடிக் கொண்டிருந்தார். ருத் அவனை அறிமுகம் செய்தாள்."இவன் தான் மார்க்கின் கடைசித் தம்பி ஜோய்" என்று கிழவரைப் பார்த்து தனது கணவன் என்றவள், அவரை நோக்கி நீங்கள் இருவரும் கிளப்புக்கல்லவா கிளம்ப இருந்தீர்கள் என்று கூறியதும் அவர் தன் சிறிய மகனையும் கூட்டிக்கொண்டு விடை பெற்று வெளியேறினார்.

'ருத்'துக்கு ஒபாமா நைரோபிக்கு வந்த செய்தியைக் கேட்டதும் ஆச்சரியமாக இருந்தது. மார்க்கும் தாயும் ஒபாமாவின் மற்றைய மகன் எப்படி இருப்பான் என்று அறிய ஆவலோடு இருந்தார்களாம்."உனது பெயர் ஒபாமா இல்லையா? உனது அம்மா மீண்டும் விவாகம் செய்து கொண்டாள். பின் எதற்காக அந்த "ஒபாமா" என்ற பெயரை இன்னும் ஒட்டிக்கொள்ள வேண்டும்?" என்றாள் ருத். ஒபாமா ஒன்றும் விளங்காதவர் போல மென்மையான சிரிப்பை மட்டும் உதிர்த்து விட்டு வாழாவிருந் தார்.

மார்க்கின் அமெரிக்க பல்கலைக்கழகப் படிப்பைப் பற்றி விசாரித்தறிந்தார் ஒபாமா. அவன் ஸ்ரவன்ட் (STANFORD) பல்கலைக் கழகத்தில் (Physics) பௌதீகவியலில் பட்டப் படிப்பு மேற்கொண்டுள்ளான். அவன் படிக்கும் துறையை மிகச் சிலரே தேர்ந்தெடுக்கின்றனர். அவ்வளவு கடினம் என்றாள்.

## ஜம்பொன்

மீண்டும் பரியைப் பார்த்துக்கேட்டாள் "நீயும் ஹாவார்ட் பல்கலைக்கழகத்துக்கு போகப் போகிறாயாம்.உன்னுடைய அப்பாவும் அங்குதான் படித்தார். அவருடைய மூளை உனக்கு வந்திருக்கிறது. நல்ல காலம் அதை விட அவரின்ஏனையகுணங்கள் உனக்கு வரவில்லை. உன் தந்தை ஒருவிதமான பைத்தியம். குடிப்பழக்கம் அதை மோசமாக்கிவிட்டது. எப்போதாவது உன் அப்பா ஒபாமாவைப் பார்த்திருக்கிறாயா? என்று கேட்டாள் ருத். ஆம் . தான் பத்து வயதாக இருக்கும்போது ஒரு முறை அவரைப் பார்த்ததாகக் கூறினார் ஒபாமா. (தொடரும்)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

9-IV

**நெல்லுக்கு - பிலிப்பைன்சு நாட்டில்**

உலக நெல் ஆராய்ச்சி நிறுவனம் International Rice Research institute -வெப் தளத்தில்- www.irri.org பிலிப்பைன்சு நாட்டிலுள்ள மனிலா எனும் பகுதியில் அமைக்கப்பட்டது. நெல்லிலே ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதை விட முடுக்கி விடப்பட்டன என கூறலாம். கணனி வலையமைப்பு உடையவர்கள் www.irri.org. என்ற வெப்தளத்திற்கு சென்று பாருங்கள். வரலாறும், நிகழ்வுகளும் விலாவாரியாக தரப்பட்டிருக்கின்றன.

ஆனாலும் இத் தொடரை வாசிப்பவர்களுக்கு வசதியாக கணனி வசதியற்றவர்களுக்காக அவற்றை அவ்வப்போது விலாவாரியாக இங்கே விபரிக்க விழைகிறேன்.

**கோதுமைக்கும் சோளத்திற்கும் - மெக்சிக்கோவில்**

கோதுமை மற்றும் சோளப்பயிரின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஆய்வினை முடக்கிவிட உலகளாவிய கோதுமை மற்றும் சோளம் ஆய்வு மற்றும் மேம்பாட்டு நிலையம் மெக்சிக்கோவில் நிறுவப்பட்டது. பிறப்புரிமையியல் பற்றிய ஆய்வுகள் அந் நிலையத்தில் விரைந்து மேற்கொள்ளப்பட்டன.

இதன் விளைவாக பல புதிய திருந்திய வர்க்கங்கள் கோதுமையிலும், சோளத்திலும் உருவாக்கப்பட்டன. இவ்வாறு உருவாக்கப்பட்ட புதிய வர்க்கங்கள் உயர்வான விளைச்சலைக் கொடுத்ததனால் ஓரளவிற்கு அப்போது எதிர்பார்த்திருந்த பல பட்டினிச் சாவுகள் தவிர்க்கப்பட்டன. தொடர்ச்சியாக புதிய வர்க்கங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

**எதிர்பார்த்தது ஒன்று; எதிர்பாராதது இன்னொன்று**

நாம் நினைப்பது போல் எதுவும் நடந்து விடுவதில்லை. நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை... ஏதோவொன்றை எதிர்பார்த்திருந்த போது இன்னொன்று எதிர்பாராமல் நடந்து விடுகின்றது. இது நிஜமாக நடந்தது பசுமைப் புரட்சியில் அதிகரித்த விளைச்சலை எதிர்பார்த்திருந்த விஞ்ஞானிகளுக்கு இன்னொரு பக்கத்தில் உருவாக்கப்பட்ட பயிரிணங்கள் உள்ளீடுகளை நம்பியிருந்தன.

மாறாக அதிகரித்த விளைச்சல் ஒன்றே குறியாக இருந்ததனால் புதிய இனங்களில் பீடையெதிர்ப்பு தன்மை நலிவடைந்து விட்டது. அத்துடன் இவ்வினங்கள் உள்ளீடுகளில் தங்கியிருக்கும் தன்மைக்கு மாற்றம் பெற்றன. உள்ளீடுகளாக அசேதன இரசாயனப் பசளைகளைக் குறிப்பிட்டுக் கூறலாம். உள்ளீடுகளின்றி அதிக விளைச்சலை இவ்வகை பயிர் வர்க்கங்கள் தரமுடியாதவையாகும்.

**அசேதன இரசாயனப் பசளைகளால் பீடையெதிர்ப்பு நலிவடைந்தது.**

அசேதன இரசாயனப் பசளைகளின் அறிமுகம் பயிர்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக மாறிவிட்டது. குறிப்பாக யூரியா, மியூரியேற்று பொட்டாசு, சுப்பர் பொசுபேற்று ஆகிய அடிப்படை நுண்ணூட்டச் சத்து செயற்




கையாக உற்பத்தி செய்யப்பட்டு விளைநிலங்களுக்கு பிரயோகிக்கப்பட்டன. இங்கே யூரியா தழைச்சத்திற்காகவும் (N) சுப்பர் பொசுபேற்று மணிச்சத்திற்காகவும் (P) மியூரியேற்று பொட்டாசு சாம்பல் சத்திற்காகவும் (K) பயன்படுத்த வேண்டியதாயிற்று.

அதுவும் தழைச்சத்து அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட போது பயிர்களில் தரைமேல் இலைப் பகுதி விசாலமாக பெருத்து வளரத் தொடங்கியதால் அவற்றில் பீடையெதிர்ப்பு தன்மை நலிவுறத் தொடங்கியது. இந்த மாற்றத்தை பயிர்களிலேற்பட்ட விளைவை விஞ்ஞானிகள் எதிர்பார்த்திருக்கவில்லை.

இதனை பசுமைப் புரட்சியிலீடுப்ட்ட புதிய திருந்திய வர்க்கங்களை கலப்பினப் பிறப்பாக்கம் மூலம் உருவாக்கிய விஞ்ஞானிகள் கவனிக்கத்தவறியதாகவும், அது ஒரு மாபெருந் தவறு எனவும் அந்த நாள் உலக நெல் ஆராய்ச்சி நிலைய பணிப்பாளர் மனந் திறந்து தெரிவித்திருந்தார். மொத்தத்தில் இங்கே ஏதோ செய்யப்போய் ஏதோவாகிய கதையாக மாறியதை கவனித்தீர்களா?

புதிய வர்க்கங்கள் போட்டி போட்டுக் கொண்டு அனைத்து விளைநிலங்களையும் ஆக்கிரமிக்கத் தொடங்கின. உணவுற்பத்தி பன்மடங்கால் உயர்ந்தது. மிகப் பெரிய இமாலய சாதனை பசுமைப் புரட்சியென்ற பெயரில் நிகழ்த்தப்பட்டது. அதில் எமக்கும் உணவு கிடைத்தது என பெருமைப்பட்டுக் கொண்டீர்களா?

**பெருமை நீடித்து நிலைக்கவில்லை**

பயிர்களிலிருந்து விளைச்சல் பலமடங்கால் பெருகியது. உணவுற்பத்தியில் சாதனை, பட்டினி இனி இல்லை, பஞ்சத்தை விரட்டிடும் தந்திரம்.. இவ்வாறெல்லாம் பசுமைப் புரட்சிக்கு வெவ்வேறு அர்த்தங்களை பொருந்திப் பலரும் பார்த்தனர். ஆனால் இத்தனை வீறாப்பும் பீடையெதிர்ப்பு பயிர்களிடையே நலிவுற்ற போது நொய்ந்து போனது. விவசாயிகளுக்கு புதிய தலையிடி ஆரம்பமானது. அது இன்றும் கூட அவர்களை விட்டகலாது இடியாக இடித்துக் கொண்டேயிருக்கின்றது. இயற்கையின் சீற்றத்தினால் எழுந்த இடியல்ல இது. மனிதனின் சுயநோக்கத்திற்காக மனிதனே ஏற்படுத்திக் கொண்ட இடி இது.

**பீடை பெருக்கம் - மாறாத தலையிடி**

பயிர்களில் பீடைகளின் தாக்கம் அதிகரித்தமைக்கும், அதன் மூலம் பயிருற்பத்தியில் இழப்பு ஏற்பட்டமைக்கும் மனிதனே காரணம். "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஒருவன்" என்பது இங்கே மிகவும் பொருத்தீப்பாடானது.

பீடைகளாக பின்னாளில் உருவெடுத்த பூச்சிகளோ, சிற்றுண்ணிகளோ ஆரம்பத்தில் பயிர்களில் சேதமதிகமாக ஏற்படுத்தவில்லை. நாம் வலிந்து அடித்த பீடை நாசினிகளால் பூச்சி மற்றும் சிற்றுண்ணிகள் வீறு கொண்டெழுந்து வீறாப்புடன் பல்கிப் பெருகி பீடைகளாகி கட்டுப்படுத்த முடியாதளவிற்கு வளர்ச்சி கண்டு விட்டன. இவ்வாறாக பெருகிய பீடைகள் பயிர்களில் ஏற்படுத்திய சேதமும் அதனால் பயிர் செய்பவர் உளமதில் ஏற்படுத்திய தாக்கமும் மாறாத தலையிடியாகி, பேரிடியாகி இன்றும் விவசாயிகளை ஆட்டிப்படைக்கின்றன.

இந்தத் தலையிடிக்கு வெறுமனே பீடை நாசினிகள் மட்டும் தீர்வல்ல. இதையறியாத விவசாய விற்பன்னர்கள் எதற்கெடுத்தாலும் பீடை நாசினியை விசிறிவிட்டு பின்பு அது எதுவும் வேலை செய்வதில்லை என குறைபட்டுக் கொள்வதில் என்ன பயன்? அன்றிருந்தவர் விட்ட அதே பிழைகளை இவ்வளவு பட்டறிவிற்கு பின்னரும் திரும்ப



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

திரும்ப விடுவது ஏன்? இதற்கு விடை தேட இன்னொரு இடத்தில் இணைவோம்.

**பீடை நாசினிகள் - அறிமுகமான விந்தை**

இரண்டாம் உலகப் போரின் போது சர்வாதிகாரியென வர்ணிக்கப்பட்ட ஹிட்லரின் படைகள் காடுகளை ஊடறுத்து எதிரி நாட்டினுள் உட்புக முனைந்த போது பூச்சிகளின் தாக்கத்திற்குள்ளானார்கள்.

குறிப்பாக நுளம் பின் தாக்கம் காடுகளை ஊடறுத்து சென்ற போது இருந்ததாகவும் அதற்கு உடனடி பரிகாரம் வேண்டுமென ஹிட்லர் அந்நாட்டு விஞ்ஞானிகளுக்கு பணித்து முதல் பீடை நாசினி பூச்சி நாசினியாக டிடிரீ (DDT)கண்டுபிடிக்கப்பட்டது.

நுளம்பினை கட்டுப்படுத்த கண்டுபிடிக்கப்பட்டது. பின்னாளில் பயிர்களனைத்திற்கும் விசிறப்பட்டது. இக்கண்டுபிடிப்பு தொடராக பல பீடைநாசினிகளை தோற்றுவிக்க வழி சமைத்தது.

வகை வகையாக பல அளவுகளில் பீடை நாசினிகள் உற்பத்தி செய்வது விற்பனைக்கு விட்டார்கள். ஒரு வித கட்டுப்பாடும் இல்லாத காரணத்தினால் பீடை நாசினி பயன்பாடு கணக்கிலடங்காது எல்லை மீறிவிட்டது. விந்தையான கண்டுபிடிப்பு விதைத்த தலையிடி இன்றுவரை எங்களூர் விவசாயிகளை ஆட்டி வைக்கிறது.

(தொடரும்)

# யாழ். மாவட்ட விவசாய அபிவிருத்தியில் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தின் பங்களிப்பு

**சேதனப் பண்ணை**

சேதன விவசாய செய்கை முறைமையை மாவட்ட மட்டத்தில் முன் எடுப்பதற்கு முதற் படியாக பண்ணையில் கால் ஏக்கர் நிலப்பரப்பில் சேதனப் பண்ணை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றது. இம் முயற்சியில் குறிப்பிடத்தக்க அம்சங்களான மண்புழு உரம், மண்புழு கழுவுநீர் தயாரிப்பும் பாவனையும், திரவ பசளை உயிரியல் பீடை நாசினி என்பன தயாரிப்பும், பாவனையும் போன்ற செயல்முறைகள் விவசாயிகளை பெரிதும் கவர்ந்துள்ள செயற்பாடாக உள்ளது.

விவசாயத் திணைக்களத்கால் சேதன விவசாயத்தில் விசேட பயிற்சியளிக்கப்பட்ட இருபது விவசாயிகளினால் செய்கை பண்ணப்படும் சேதனப் பண்ணைகளில் உற்பத்தியாகும் தரமிகுந்த உற்பத்திகளுக்கு நியாய விலை கிடைப்பதை உத்தரவாதம் செய்வதற்கும் அவர்களை மேலும் ஊக்குவிப்பதற்குமாக விவசாய திணைக்களத்தின் விற்பனை நிலைய மூலம் விற்பனை செய்து கொடுப்பதற்கு ஏற்ற ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந் நடைமுறையால் மேலும் சில விவசாயிகள் இச் செய்கை முறையில் இணைந்துள்ளார்கள்.

**ஒருங்கிணைந்த பண்ணை**

வேளாண்மையை இயன்றளவு குறைவான அசேதனப்பசளை மற்றும் குறைவான புற உள்ளீடுகளுடன் செய்கை பண்ணும் முகமாக ஒருங்கிணைந்த பண்ணை நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணையில் மாடு, ஆடு, முயல், பன்றி போன்ற விலங்குகளும் தாராவும் பராமரிக்கப்படுகின்றன.

தாராவுடன் நன்நீர் மீன் வளர்ப்புத் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது. பயிர்கள், விலங்குகள், பறவையிலிருந்து பெறப்படும் உற்பத்திகள் மனித உணவிற்கு பயன்படுவதுடன் அவற்றின் மீதி, கழிவுகள் கூட்டெரு தயாரிப்பிற்கும், தாவர மீதிகளில் விலங்குணவாக பயன்படுத்தக் கூடியவை விலங்குணவாகவும், ஏனையபகுதி கூட்டெரு தயாரிப்பிற்கும் பயன்படுகின்றன.

சமையல் அறை மீதி, உணவுக் கழிவுகள் தாராவிற்கும், பன்றிக்கும் பயன்படுவதுடன் தாராவின் கழிவு மீன் தொட்டியில் சேர்க்கப்படுகின்றது. மீன் தொட்டியிலும் தாரா உணவை பெறுகின்றது.

மீன் சுழற்சி முறையில் தயாரிக்கப்படும் கூட்டெரு பயிர்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது. கால்நடை தீவனத்திற்காக பராமரிக்கப்படும் புற்தரை (CO 3) இங்கு உருவாகும் கூட்டெருவிலேயே வளர்க்கப்படுகிறது.

**பயிர்ச் செய்கையில் தாரா**

தாராக்களை பயிர்ச் செய்கை பண்ணப்படும் நிலப்பரப்பில் மேய விடுவதால் கெடுதி செய்யும் பூச்சி, புழுக்களை தின்று அழித்துவிடும்.

எடுத்துக்காட்டாக நிலக் கடலைச் செய்கையில் பயிர்களை இளம் பருவத்தில் தாக்கிய அட்டைகளை தாராக்கள் மூலம் கட்டுப்படுத்தக்கூடியதாக இருந்தது.

**பழமரச் செய்கை**

எமது மாவட்டத்தில் பழமரச் செய்கையை ஊக்குவிப்பதற்கு தரமான நடுகைப் பொருட்களின் தேவை உணரப்பட்டு அதனை நிவர்த்தி செய்யும் முகமாக ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் தெரிவு செய்யப்பட்ட மரங்களின் புதிய முறை நாற்றுக்களைக் கொண்டு பழமரத் தாய்த் தாவரத் தொகுதி ஒன்று நான்கு வருடங்களின் முன் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இச் செயல்முறை இம்மாவட்ட மக்களுக்கு பெரு வரப்பிரசாதமாகும். இதன் மூலம் தனியார் நாற்று மேடையாளர் தாய்த் தாவரத் தொகுதியை உருவாக்குவதற்கு வசதியாக புதியமுறை மூலம் இனப் பெருக்கம் செய்யப்பட்ட கன்றுகள் அவர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

விவசாயிகள் மற்றையோர் நடுகை செய்வதற்குரிய பழமர நடுகைப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகிறது.

**நாற்றுக்கள் விற்பனை - 2008**

**பழமர நாற்றுக்கள்**

தேசி - 2136, பப்பாசி - 1740, மாதுளை - 1386, கொய்யா - 1030, யம்பு - 996, நெல்லி - 777, பலா - 581.

**மரக்கறி மர நாற்றுக்கள்**

முருங்கை - 535, அம்பறல்லா - 421, அகத்தி - 191, வல்லாரை - 561.


**மரக்கறி நாற்றுக்கள்**

மரக்கறி நாற்றுக்களைப் பொறுத்த வரையில் பயிற்சித் துண்டங்களின் தேவை நிமித்தம் அமைக்கப்படும் நாற்று மேடைகளிலிருந்து தேவைக்கு மேலதிகமாக பெறப்படும் நாற்றுக்கள், மற்றும் மரக்கறி நாற்று மேடை சம்பந்தமான பயிற்சி வழங்கும் போது ஸ்தாபிக்கப்படும் நாற்று மேடைகளிலிருந்து பெறப்படும் நாற்றுக் களும் விவசாயிகளுக்கு அவ்வப்போது விற்பனை செய்யப்படுகின்றன.

**S.V. லூக்காஸ்**
பண்ணை முகாமையாளர்
பிரதி விவசாயப்பணிப்பாளர் விரிவாக்க அலுவலகம்
யாழ்ப்பாணம்

(தொடரும்)

மாடு வளர்ப்பு



முயல் வளர்ப்பு



தீவனப்புல் வளர்ப்பு



செட்டியாரின் நட்டம் ஊர்மேலே
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி

## அமைச்சரின் குற்றச்சாட்டும் வணிகர் கழகத்தின் நிராகரிப்பும்

யாழ்ப்பாண வர்த்தகர்கள் பொருட்களை அதிகளவு விலைக்கு விற்பனை செய்வதாக யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகள் அடியோடு நிராகரித்துள்ளனர்.

குற்றஞ்சாட்டியவர் தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த அமைச்சர்.

அதனை மறுத்தவர்கள் யாழ்ப்பாண வணிகர்கழகப் பிரதிநிதிகள்.

இங்கு குற்றஞ்சாட்டியவரும் அதனை மறுத்தவர்களும் பாதிக்கப்பட்ட தரப்பினர் அல்ல என்பதே முக்கிய விடயமாகும்.

இலங்கையில் இது போன்ற பல சம்பவங்கள் நடப்பது உண்டு. அதாவது சம்பந்தப்படாதவர்கள் இல்லாமல் அவர்களின் கருத்துக்கள் கேட்கப்படாமல் குற்றச்சாட்டும் மறுப்பும் இடம் பெறும்.

இவ்விரண்டு விடயத்தையும் பார்த்து சம்பந்தப்பட்டவர்கள் உள்ளூர நொந்து கொள்வார்கள்.

இந்த வழமை தபால் தொலைத்தொடர்பு அமைச்சரினதும் யாழ். வணிகர் கழகத்தினதும், குற்றச்சாட்டுடனும், மறுப்புடனும் தொடர்புபட்டுள்ளது.

அதாவது பொருட்களின் விலை உயர்வினால் பாதிக்கப்பட்டவர்கள் யாழ். குடாநாட்டு மக்கள். அவர்கள் பொருட்களுக்குக் கொடுத்த விலை ஏராளம்.

இந்த விலை அதிகரிப்பினால் எத்தனையோ குடும்பங்கள் ஒரு நேர உணவுடன் உறங்கிய வரலாறுகளும் உண்டு.

கப்பல் கட்டணத்தின் அதிகரிப்பு, பொருட்களின் சேதம் காரணமாக குடாநாட்டில் பொருட்களின் விலை அதிகரிப்பு எனக் கூறப்பட்டது.

அதில் நியாயங்களும் இருக்கவே செய்கின்றது. ஆனால் ஏ-9 பாதையூடாக பொருட்கள் எடுத்து வரப்படும் போது விலை அதிகரிப்பு எதற்கானதென்ற கேள்விகள் எழும் போது தகுந்த காரணங்களை முன்வைப்பது எங்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

யாழ்ப்பாண வர்த்தகர்கள் யுத்த சூழ்நிலையிலும் தங்கள் சேவையை திறம்பட செய்தவர்கள்.

அவர்களின் பணி போற்றுதலுக்குரியது. எத்தனையோ ஆபத்துக்களுக்கு முகங் கொடுத்து அவர்கள் ஆற்றிய பணியினால் தான் யாழ். குடாநாட்டு மக்களின் அன்றாட தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

இந்தப் பெருமைக்குரிய வர்த்தகர்களின் அப்பழுக்கற்ற பணி மாசுபடாமல் இருக்க பொருட்களின் விலை அதிகரிப்பு தொடர்பான குற்றச்சாட்டிலிருந்து அவர்கள் விடுபட்டுக் கொள்ள வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பமாகும்.

## கைது செய்யப்பட்ட ஆயிரம் விடுதலைப்புலிகளுக்கெதிராக வழக்கு தொடரப்படும்-அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

கைதுசெய்யப்பட்டுள்ளஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் என்ற பெயரில் 10 ஆயிரம் பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். இவர்களில் ஆயிரம் பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வது குறித்த சட்டப்பின்னணி குறித்து ஆராயப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னி இறுதி மகா யுத்தம் என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

இறுதிக்கட்ட போராட்டத்தில் மொத்தமாக 22ஆயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் இதில் 10 ஆயிரம் உறுப்பினர்கள் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## 4 ஆண்டுகளாக மோல்ற்றா தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 92 அகதிகளுக்கு பிரான்ஸ் புகலிடம்

(கொழும்பு)

மோல்ற்றா தீவில் கடந்த 4 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை உள்ளிட்டஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்து 92 அகதிகள் நேற்று முன்தினம் காலை பிரான்சுக்கு மாற்றப்பட்டுள்ளனர். அவர்கள் 2008 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, சோமாலியா, சூடான் போன்ற நாடுகளில் இருந்து அரசியல் தஞ்சங் கோரி சென்ற நிலையில் கைது செய்து மோல்ற்றா தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களே இவ்வாறு இடம்மாற்றப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் வட பிரான்சிலுள்ள மூன்று நகரங்களில் மீள் குடியமர்த்தப்பட இருப்பதாக இணையத்தள செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு மேலும் ஒரு அகதிகள் குழு ஒன்றையும் பிரான்ஸ் ஏற்றுக்கொள்ள திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## ஒஸ்லோவில் 5 இலங்கையர்களுக்கு கடூழியச் சிறைத்தண்டனை

(கொழும்பு)

சமுராய் வகை வாள்களைப் பயன்படுத்தி தாக்குதலை மேற்கொண்ட ஐந்து இலங்கையர்களுக்கு ஒஸ்லோ நீதிமன்றம் கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித் துள்ளது.

11 வருடங்கள் முதல் 14 வருடங்கள் வரையில் குறித்த இலங்கையர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நோர்வேயின் கலபெக்க பகுதியில் ரமணன் விவேகானந்தன் என்ற 20 வயது இளைஞரை வாளால் வெட்டிக்கொன்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதனால் இந்த தண்டனைகள் வழங்கப் பட்டுள்ளன.

பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியில் இருந்து குறித்த நபர்கள் ஒஸ்லோவின் கலபெக்க பகுதிக்கு வருகை தந்து இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என தெரிவிக்கப் படுகின்றது.

படுகொலைச் சம்பவத்துடன் 5 பேருக்கு தொடர்பிருப்பதாகவும் மேலும் 5 பேருக்கு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பிருப்பதாகவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஒஸ்லோவில் இரு தமிழ்குழுக்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலவி வந்த முறுகல் நிலையின் விளைவே இந்த படுகொலை மற்றும் மோதல் சம்பவங்கள் என தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுடனான சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் 5 வலயங்களிலும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றுவோரையும் உயர் தேசிய டிப்ளோமா (ஆங்கில பாட) பயின்றவர்களையும் சமூக சேவைகள் அமைச்சர் அவரது காரியாலயத்தில் காலை 7 மணிக்கு சந்திக்கவுள்ளார். மேற்குறிப்பிட்ட சகலரையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ)

## பரிசளிப்பு விழா

(அல்வாய்)

புற்றளை மகா வித்தியாலயத்தின் பரிசளிப்புவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் மு.அனந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி.ஈ. இலட்சுமணன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி கௌரவிப்பார். (ஓ-6-19)

## தமிழ்த்தினப் போட்டியின் இறுதிச் சுற்று இன்று

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் வலய மட்ட தமிழ்த்தினப்போட்டியின்இறுதிச்சுற்றுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் எனவும் இதில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மாவட்ட மட்ட போட்டிகளில் பங்கு பற்ற முடியும் எனவும் தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ஓ-4-29)

## புனித -செபஸ்தியார் ஆலயத் திருவிழா

(ஊர்காவற்றுறை)

கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு திருவிழா திருப்பலியுடன் திருவிழா நிறைவு பெறவுள்ளது. (ஓ-72)

## முறைசாராக்கல்விப்பிரிவின் பயிற்சிநெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக்கல்விப்பிரிவினால் யாழ். வைதீஸ்வராக்கல்லூரியில் சிகை அலங்காரம், கேக்ஜசிங், தையல், சமையல் கலை போன்ற பயிற்சிகளும், பேசியல் மேக்கப் போன்ற குறுங்கால பயிற்சிகளும், அழகுக் கலை நிபுணர் பற்றிக் குயின்ராவினால் இம்மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஆர்வமுள்ளோர் கல்லூரிக் காரியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அதன்போது தொலைபேசி இலக்கங் களையும் பதிவு செய்யுமாறும் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மாலை 3 மணி முதல் 4-30 மணிவரை. போத னாசிரியரிடமும் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் கல் லூரி அதிபர் தெரிவித்துள்ளார். (ஓ)

## துடுப்பாட்ட சுற்றுப் போட்டி

ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் நடத்தும் 20-20 துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை காலை சென்றலைட்ஸ் வி.க.எதிர் நியூஸ்ரார்.வி.கழகமும் மாலை-மானிப்பாய் பரிஸ்.வி.க. எதிர் யங்ஸ்ரார் வி.கமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை-யாழ் பல்கலைக்கழக வி.க எதிர் யூனியன் வி.கமும் மாலை - ஜொலிஸ்ரார்.வி.க எதிர் அரியாலை ஐக்கிய வி.க மும் மோதவுள்ளன. (ஓ)


## சுவாமி விவேகானந்தரின் எல்லாவற்றிலும் இறைவனைக் காணலாம்



எல்லையற்ற உணர்ச்சிப் பெருக்கிற்கு இங்கே இடம் இருப்பதை போல அதே அளவு பண்பாட்டிற்கும் அறிவிற்கும் இடம் இருக்கின்றது. கருணையும் அறிவும் இணைந்து அளவில்லாமல் நம்மிடம் இருக்கட்டும். இரண்டும் இணையாகச் செயல்படட்டும்.

அனேகமாக எல்லா மதங்களும் இந்த உண்மையைப் புரிந்து கொண்டிருக்கிறான். ஆனால் அவை எல்லாமே ஒரேவிதமான தவறு செய்கின்றன. அதாவது கருணைக்கும் உணர்ச்சிகளுக்கும் தான் அவை மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கின்றன. உலகம் தீமை நிறைந்தது, எனவே உலகத்தைத் துறந்து விடுங்கள் என்பது மி[illegible]ச்சிறந்த போதனை, ஒரே போதனை - சந்தேகம் இல்லை. உலகத்தைத் துறந்து[illegible]கள்.

# பூமிக்கு காத்திருக்கும் ஆபத்து



வீதியில் வேகமாகச் சென்று கொண்டிருக்கும் ஒருவாகனம் லேசாக பாதையை விட்டு விலகும் போது மிகப் பெரிய விபத்தைச் சந்திக்கும் ஆபத்து இருக்கும். அதுபோல வேகமாக சுற்றிக் கொண்டிருக்கும் பூமியும் தனது சுற்றுப்பாதையில் இருந்து லேசாக விலக நேர்ந்தால் கூட மிகப் பெரிய ஆபத்து நேரிடும் என்று எச்சரிக்கிறார்கள் விண்வெளி விஞ்ஞானிகள்.

சூரியனை மையமாக வைத்து நீள்வட்டப் பாதையில் பூமி உட்பட பிற கோள்கள் சுற்றி வருகின்றன. இதுதவிர சில துணைக்கோள் தனிப்பாதையில் கோள்களையும் சுற்றி வரு கின்றன. உதாரணத்துக்கு பூமியை நிலவு சுற்றி வருவதைக் கூறலாம். இவ்வாறு விண் வெளியில் ஏராளமான கோள்கள், துணைக்கோள்கள், விண்கற்கள் தங்களுக்கு என பாதையை நிர்ணயம் செய்து கொண்டு அதில் சுற்றி வருகின்றன. இதில் ஏதேனும் ஒரு சிறிய மாற்றம் நிகழ்ந்தால் போதும்... விண்வெளியில் தீபாவளி திருவிழா காட்சிதான். கோள்கள் ஒன்றோடு ஒன்று மோதி தீப்பிடித்து எரிந்து அனைத்தும் நாசமாகிவிடும்.

இதுபோன்ற ஆபத்துள் பூமி உட்பட மற்ற கோள்களுக்கு வரும் ஆபத்து எந்த அளவுக்கு உள்ளது என்று பிரெஞ்சு விஞ்ஞானிகள் டாக்டர் ஜாக்குயஸ் லஸ்கர், மிகேல் காஸ்டினியூ ஆகியோர் ஆய்வு நடத்தினார்கள். இதற்காக இவர்கள் கணனி மூலம் ஆபத்து பற்றிய கணிப்புகளை ஆராய்ந்தனர்.




அப்போது சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களின் சுற்றுப் பாதையில் ஏதேனும் ஒன்றில் சிறிய மாற்றம் ஏற்பட்டால் கூட அது பூமியை பெரிதும் பாதிக்கும். இந்த மாற்றம் நிகழ்ந்தால் செவ்வாய், வீனஸ், மெர்க்குரி போன்ற கோள்களுடன் பூமி மோதி வெடித்துச் சிதறும் ஆபத்து அதிகம் உள்ளது.


இதில் ஆறுதலான விடயம் என்னவென்றால் இவ்வாறு நடக்க பல கோடியில் ஒரு வாய்ப்புத்தான் உள்ளது. மேலும் இதுபோன்ற தவறு நடக்க இப்போதைக்கு வாய்ப்பு இல்லை என்றும் சுமார் 500 கோடி ஆண்டுகளுக்கு பின்னர் வேண்டுமானால் இது போன்ற'' கோள்களின் மோதல்'' நடக்கும் ஆபத்து ஏற்படலாம் என்றும் கணித்துள்ளனர்.

கோள்களின் சுற்றுச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் விண்வெளியில் நிகழும் விண்கற்களின் மோதல்கள் போன்றவை காரணமாக கோள்களின் மாறும் ஆபத்துள்ளது. இது நடைபெற பலநூறு கோடி ஆண்டுகள் ஆகும் என்பதால் இப்போதைக்கு பூமியில் உள்ள நாம் நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.

# சனி நிலவில் புதைந்து இருக்கும் கடல்...

சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களில் குறிப்பிடத்தக்கது சனி. சூரிய குடும்பத்தில் இரண்டாவது பெரிய கோளான இது சூரிய னில் இருந்து 6ஆவது கோளாக உள்ளது. சனி கோளில் ஹைட்ரஜன் வாயு அதிக அளவில் நிரம்பி இருக்கிறது. இது தவிர ஹீலியம் வாயும் காணப்படுகிறது. பாறைகளால் நிரம்பி இருக்கும் சனி கோளில் பனிப்பாறைகளும் உள்ளன. வாயு நிரம்பி இருப்பதால் இந்தக் கோளுக்கு''வாயு கோள்''என்ற பெயரும் உண்டு. சனி கோளின் சிறப்பு அதைச் சுற்றி இருக்கம் ''வளையம்''

சூரிய குடும்பத்தில் உள்ள கோள்கள் ஒவ்வொன்றையும் ஏராளமான துணைக்கோள்கள் (நிலவு) சுற்றி வருகின்றன. இந்த வகையில் சனி கோளுக்கு ஏராளமான துணைக்கோள்கள் உள்ளன. சுமார் 61 கோள்கள் சனியைச் சுற்றி வருகின்றன. இதில் குறிப்பிடத்தக்கது ''என்சிலாடஸ்'' என்ற கோள் ஆகும்.1789 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி பிரடரிக் வில்லியம் ஹெர்ஸ்சல் என்ற விண்வெளி விஞ்ஞானி சனியின் நிலவாக என்சிலாடஸ் உள்ளது என்று கண்டுபிடித்தார்.




சனி மற்றும் அதன் நிலவுகள் குறித்து காசினி விண்கலம் ஆய்வு நடத்தி வருகிறது. இந்த விண்கலத்தில் உள்ள சக்தி வாய்ந்த கமிரா எடுத்து அனுப்பிய புகைப்படங்களை ஆய்வு செய்தபோது என்சிலாடஸ் நிலவில் உப்பு நிறைந்த கடல் புதைந்துள்ளது தெரியவந்தது. 500 கிலோ மீற்றர் விட்டம் கொண்ட இந்தநிலவின் மேற்பரப்பு பனிக்கட்டியாக உறைந்துள்ளது. இந்த பனிப்பாறைகளுக்கு அடியில் கடல் புதைந்து இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஏன் என்றால் 'என்சிலாடஸ்' மேற்பரப்பில் இருந்து வெளிப்படும் நீர்த்தி வலைகள் மற்றும் தூசிகளில் உப்பு தண்ணீர் கலந்துள்ளது.

எனவே என்சிலாடஸ் பரப்புக்குள் புதைந்து கிடக்கும் கடலில் இருந்து இந்தத் தண்ணீர் திவலைகள் வெளிப்படுகின்றன என்பது விஞ்ஞானிகளின் வாதம். இதன்மூலம் தண்ணீர் உள்ள கோள் என்ற வரிசையில் என்சிலாடஸ் இடம் பெறுகிறது. ஒருகோளின் மேற்பரப்பிலோ அல்லது அடிப்பரப்பிலோ தண்ணீர் காணப்பட்டால் அங்கு உயிரினம் இருக்கும் சூழ்நிலை இருக்கும் என்பது விஞ்ஞானிகளின் கருத்தாகும்.எனவே அடுத்த கட்டமாக என்சிலாடஸ் கோளில் உயிரினங்கள் இருந்துள்ளனவா? அல்லது தற்போது உயிரினங்கள் உள்ளனவா? என்று ஆய்வுகள் நடக்கிறது.

# கடல் அலையும் காந்த சக்தியும்...





பூமியைச் சுற்றிலும் காந்த சக்தி இருப்ப தை நாம் அறிவோம். இதற்குக் காரணம் பூமிக்குள் புதைந்து இருக்கும் கனிமங்கள் என்று கருதப்பட்டது. அதாவது பூமியின் மேற்பரப்பிலும் பூமிக்குள்ளும் இரும்பு உட்பட ஏராளமான உலோகங்கள் உள்ளன. இதன் காரணமாகவே பூமியின் மேற்பரப்பில் காந்தப்புலம் ஏற்படுகிறது என்று கூறப்பட் டது. அதாவது பூமியின் மையப்பகுதியில் சுமார் 1500 மைல் சுற்றளவில் வெள்ளை நிறத்தில் கொதிக்கும் இரும்பு திரவ வடிவில் உள் ளது. இதைச்சுற்றி சுமார் 1400 மைல்கள் அளவில் பிற உலோக பரப்பு இருக்கிறது. இதன் காரணமாகவே பூமியைச் சுற்றி காந்தப் புலம் உருவாகிறது என்று கூறப்பட்டது.

ஆனால் இப்போது புதிய கருத்து ஒன்று வெளியாகி இருக்கிறது. அமெரிக்காவில் உள்ள இல்லினாயிஸ் நகரில் இருக்கும் நார்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தின் இரசாயன மற்றும் உயிரியியல் தொழில்நுட்ப ஆய்வாளர் கிரிகோரி ரிஸ்கின் இதுகுறித்து கூறியிருப்பதாவது,

கடலுக்குள் செல்லும் கடல் நீரோட்டம் மற்றும் கடல் அலைகள் காரணமாகவே பூமியின் காந்தப்புலம் ஏற்படுகிறது. உப்புத் தன்மை மிக்க கடல் நீரில் உள்ள உப்பு மின் னோட்டம் பெறுகிறது. இதன் காரணமாக மின்சாரம் மற்றும் காந்தப்புலம் ஏற்படு கிறது. அதாவது கடல் நீரோட்டம் வேகமாக செல்லும் போதும் கடல் அலை உருவாகும் போதும் ஏற்படும் ஆற்றல் காரணமாக இந்த உப்பு நீர் மின்னோட்டம் பெறுகிறது. இந்த செயல் தொடர்ந்து நடைபெறும் போது பூமியைச் சுற்றி காந்தப்புலம் ஏற்படுகிறது. என்கிறார் கிரிகோரி.

# விண்வெளிக்கு செல்லும் உளவு விமானம்

வளர்ந்த நாடுகளும் ,வளர்ந்து வரும் நாடுகளும் தங்களது பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்துகின்றன. குறிப்பாக வல்லரசு நாடுகள் அணு ஆயுதத் தாக்குதலில் இருந்து தங்களது நாட்டைப் பாதுகாக்க நவீன கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்த ஆர்வம் காட்டுகின்றன.



அமெரிக்க விமானப்படை இதற்கான திட்டத்தில் இறங்கி விமானி இல்லாமல் இயங்கும் ஒரு தானியங்கி விமானத்தைத் தயாரிதுள்ளது. இதுதான் விண்வெளி பாதுகாப்பு வீரனாக செயல்பட இருக்கிறது.இதற்கு எக்ஸ் 37 பி என்று பெயரிடப்பட்டுள்ளது. இது அடுத்த வருடம் ஜனவரி மாதம் விண்வெளிக்கு அனுப்பப்படுகிறது.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான 'நாசா' மற்றும் விமான தயாரிப்பு நிறுவனமான 'போயிங்' ஆகியவை இணைந்து இந்த ஆள் இல்லா விமானத்தை தயாரித்துள்ளனர்.

தொடர்ந்து 3 வாரங்கள் வரை விண்வெளியில் பறக்கும் திறன் கொண்டதாக இருக்கும் இந்த விமானத்தில் சக்திவாய்ந்த கமரா மற்றும் ராடார் கருவிகள், தகவல் தொடர்பு சாதனங்க்ள் பொருத்தப்பட்டிருக்கும். இதன்மூலம் ஒரு நாட்டின் வான் எல்லையைப் பாதுகாப்பதோடு , எதிரி நாட்டின் எல்லைப்பகுதியையும் 'உளவு' பார்க்க முடியும்.

# இரவு வேளைகளில் படகுகளில் சென்று கடற்றொழில் செய்ய விரைவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மீனவர்கள் இரவு வேளையில் வள்ளங்கள்,படகுகளில் கடற்றொழில் செய்வதற்கு வசதியாக ஒருமாத காலத்திற்குள் சற்லைற் ரிவிலைக்றர்கள் வழங்கப்படுமென மீன்பிடி, நீரியல் வள திணைக்கள பிரதிப்பணிப்பாளர் எஸ்.தர்மலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதிப்பணிப்பாளர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ். குடா கடற்பகுதியில் இரவு நேர கடற்றொழிலுக்கு தற்போது கட்டுமரங்கள், படகுகள் மற்றும் வள்ளங்கள் பயன்படுத்த கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

சிறிய படகுகள், வள்ளங்கள் மற்றும் கட்டுமரங்கள் கடற்படையினரின் கடல் பாதுகாப்பு ராடர்களில் தெரியாததாலேயே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

எனவே சற்லைற் ரிவிலைக்றர் கருவி படகுகளில் பொருத்தப்படும் இடத்து அவை ராடர்களில் பதிவாகும். தற்போது மீன்பிடி நீரியல் வள திணைக்களத்தில் பதிவு செய்ததற்கமைய சுமார் 3 ஆயிரம் மீனவர் படகுகள், வள்ளங்கள் மற்றும் கட்டுமரங்களைப் பயன்படுத்துகின்றனர்.

இவர்களுக்கு விரைவில் சற்லைற் ரிவிலைக்றர் கருவி மீன்பிடி நீரியல் வளத் திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு கடற்றொழிலாளர் சமாசங்கள் ஊடாக வழங்கப்படும் என்றார். (ச-5)

# யாழ். தபாலக விளையாட்டுக்கழக விளையாட்டுப் போட்டிகள் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தபாலக விளையாட்டுக் கழகம் நடத்தும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகளுக்கிடையிலான மென்பந்து, கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் நாளை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

காலை 8.30 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் மென்பந்து சுற்றுப்போட்டியில் யாழ்.செயலக அணியை எதிர்த்து ஹெல்த் விலேஜ் அணியும் காலை 10.30 மணிக்கு சிறிலங்கா ரெலிக்கொம்மை எதிர்த்து இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும் மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ்.செயலக அணியும் மோதவுள்ளன.

திருமகள் சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் காலை 8.30 மணிக்கு யாழ்.செயலக அணி எதிர் ஹற்றன் நஷனல் வங்கி அஸ்யூரன்ஸும் காலை 10.30 மணிக்கு யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் எதிர் யாழ்.மாநகரசபை அணியும் மாலை 3 மணிக்கு யாழ்.செயலக அணியை எதிர்த்து மதுவரித் திணைக்களம் அணியும் மோதவுள்ளன. (ச-3)

# சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்து கடந்த 18 வருடங்களாக தொழிலை இழந்துள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 60 ஊழியர்களின் மாதாந்தக் கொடுப்பனவிற்காக மொத்தம் 27 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்;

எம்மால் எடுக்கப்பட்ட நீண்டகால முயற்சியால் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தில் (லங்கா சீமெந்) பணிபுரிந்து கடந்த 18 வருடங்களாகத் தொழிலையிழந்துள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 60 ஊழியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்க மொத்தம் 27 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியில் 4 மில்லியன் ரூபாய் மாதாந்தம் ஒதுக்கப்பட்டு 60 ஊழியர்களுக்கும் வழங்கப்படும் என்றார். (ச-5)

# யுனிலிவர் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் யூன்மாதம் முதல் குறிக்கப்பட்ட விலையில் விற்பனை

(கொழும்பு)

யுனிலிவர் ஸ்ரீலங்கா லிமிடெட் நிறுவனமானது யாழ்ப்பாணத்தில் உள்ள தமது விநியோகத்தர்களான ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் (ரூபா பன்முக வர்த்தகம்) எஸ்.பி முருகேசு, ஆகியோர் ஊடாக தமது உற்பத்திப் பொருட்களான சன்லைட், லக்ஸ்,லைபோய், விம், சேர்ப்எக்சல், சண் சில்க்ஸ், பியர்ஸ் பேபி, சிக்னல் போன்ற சகல வகையான பொருட் களையும் பாவனையாளர்களின் நலன்கருதி பொருளில் குறிப்பிட்ட விலையில் சகல கடைகளிலும் பாவனையாளர்களுக்கு கிடைப் பதற்கு கடந்த யூன் மாதம் முதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

எனவே பாவனையாளர்கள் இந் நிறுவனத்தின் சகல பொருட்களையும் பொருளில் குறிப்பிட்ட விலையில் (Market Price) யாழ். மாவட்டம் எங்கும் பெற்றுக்கொள்ள முடியும் என நிறுவனத்தின் பிரதேச முகாமையாளர் வெ. செல்வதாசன் அறிவித்துள்ளார். (ஓ)

## உறுதியளித்தபடி தமிழர்களுக்கு...

புலிகளுடனான போர் முடிவுக்கு வந்துள்ளதை, அந்த நாட்டை மறுசீரமைப்பதற்கு கிடைத்த வாய்ப்பாக இலங்கை அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

போரினால் இடம் பெயர்ந்த தமிழர்கள் மீண்டும் தங்கள் சொந்த ஊரில் குடியமர்த்தப்பட இந்தியா முழு ஒத்துழைப்பை வழங்கும். இதற்காக 500 கோடி ரூபாய் வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. தேவைப்பட்டால் கூடுதல் நிதி உதவி வழங்கப்படும்.

இந்திய அரசிடம் இலங்கை ஏற்கனவே உறுதியளித்தபடி சிறுபான்மை தமிழர்களுக்கு அர்த்தமுள்ள அதிகார பகிர்வு வழங்குவதற்கு தேவையான அரசியல் நடவடிக்கையை தொடங்க வேண்டும்.

இந்த வகையில் இந்தியாவுடன் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தப்படி இலங்கை அரசியல் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தமிழர்கள் கட்சி உட்பட அனைத்து கட்சிகளுடனும் விரிவான பேச்சுவார்த்தை தொடங்க வேண்டும்.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக இந்தியாவில் இருந்து 60 பேர் கொண்ட மருத்துவக் குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவினர் இதுவரை 14ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு சிகிச்சை அளித்துள்ளனர்.

புல் மோட்டையில் தற்போது உருவாக்கப்பட்டுள்ள தற்காலிக மருத்துவமனையை தொடர்ந்து, விரைவில் வவுனியாவிலும் இந்திய மருத்துவ குழுவினர் மருத்துவமனை ஒன்றை உருவாக்கி சிகிச்சையை தொடருவார்கள்.

போரினால் உள்நாட்டில் இடம் பெயர்ந்த 3 லட்சம் தமிழர்கள் மீண்டும் தங்கள் சொந்த வீடுகளுக்கு திரும்புவதற்கு இலங்கை அரசு உறுதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறோம். அதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூத்த அரசியல் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையில் சமீபத்தில் டில்லி வந்த குழுவினர் உறுதிபட தெரிவித்திருந்தனர்.

போரினால் பாதிக்கப்பட்ட இடம் பெயர்ந்த தமிழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் தமிழ் நாட்டில் இருந்து ஏற்கனவே ஒரு இலட்சத்து 70 ஆயிரம் மூடை நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விரைவில் தமிழ் நாட்டிலிருந்து கூடுதல் நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படும் என்றார் அவர். (ச-5)

## ஏ-9 வீதியூ...

யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவேன். அப்போது யாழ்.குடாநாட்டு மீனவர்களின் மேலதிக பிரச்சினைகள் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பேன் என்றார். (ச-5)

## ஜானக...

அநுராதபுர நீதவான் நீதி மன்றத்தில் பொலிஸார் இதனை நேற்று வெள்ளிக் கிழமை இந்தக் கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தெரியப்படுத்தினர்.

ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் நீதிவானிடம் தெரிவித்தனர். (ச-5)

## ஆயிரம் புலி...

இந்த நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

புலிகளின் உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது குறித்த சட்டப் பின்னணி குறித்து ஆராயப்பட்டு வருகின்றது என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஏனைய 9 ஆயிரம் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அவர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (ச-5)

## ஐந்து இலங்...

இருப்பதாகவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஒஸ்லோவில் இரு தமிழ் குழுக்களுக்கு இடையில் நீண்ட காலமாக நிலவி வந்த முறுகல் நிலையின் விளைவே இந்த படுகொலை மற்றும் மோதல் சம்பவங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## பொதுமக்களின் இழப்புக்...

போர்ப் பகுதிகளில் பணிபுரிந்து தற்போது குற்றப் புலனாய்வுத்துறையினரால் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மருத்துவர்கள் தாம் விடுதலைப் புலிகளின் நிர்ப்பந்தம் காரணமாகவே பொதுமக்களின் இழப்புக்களை மிகைப்படுத்தி வெளியிட்டதாக அறிவித்திருப்பதன் பின்னணியிலேயே ஐக்கிய நாடுகள் சபையின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக ஐ.நாவின் இலங்கைக்கான பேச்சாளர் கோர்டன் வைஸ் பி.பி.சிக்கு தெரிவித்ததாவது;

எங்களிடம் இது குறித்துக் கேட்டபோது நாங்கள் தெரிவித்த ஒரே கருத்து இதுதான். அதாவது நாங்கள் மோதல் நடந்தபோது கண்டறிந்து அளித்த கருத்துக்களை மீள் பரிசீலனை செய்யப்போவதில்லை. இந்தத் தருணத்தில் அதைத்தான் எங்களால் கூறமுடியும்.

இந்த மருத்துவர்கள் மிகவும் சிரமமான சூழலில் மிகவும் சிறப்பான சேவையை செய்திருக்கின்றார்கள் என்பதில் எதுவிதமான சந்தேகமுமில்லை.

இப்போது அவர்கள் வெளியிட்டிருக்கின்ற கருத்துக்கள் அவர்கள் செய்த முழுமையான பணிக்கு அதாவது மிகவும் கடுமையான சூழலில் மக்களுக்கு மருத்துவ சேவைகளை அளித்த அந்த சேவைக்கு தொடர்பில்லாதவை.

அவர்கள் அந்த சேவையை மிகவும் திறம்படவே செய்திருக்கிறார்கள் என்றுதான் வெளிவந்த எல்லாத் தகவல்களும் தெரிவித்திருக்கின்றன.

விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்தபோது ஒருமாதிரியாகவும் தற்போது அரசாங்கத்தின் தடுப்புக்காவலில் இருக்கும்போது அதற்கு நேர் எதிராகவும் தகவல்கள் அவர்களிடமிருந்து வருவது ஒரு முரண்பாடான கருத்து என்று நான் நினைக்கிறேன்.

அவர்கள் பிரசாரத்திற்கு பயன்படுத்தப் படுகிறார்கள் என்று விமர்சிப்பது அனுமானத்தின் அடிப்படையிலானது.

இதேவேளை லண்டனிலிருந்து வெளியாகும் ரைம்ஸ் நாளிதழின் வவுனியா நலன்புரி முகாம்களில் ஒரு வாரத்திற்கு ஆயிரத்து 400 பேர் இறக்கிறார்கள் என்று கூறுவதுடன் நாங்கள் உடன் படுவதாக இல்லை.

அப்பத்திரிகைக்கு எங்கிருந்து புள்ளிவிபரங்கள் கிடைத்தது என்று எமக்குத் தெரியாது. அது வெறும் எண்ணிக்கைதான். இந்த எண்ணிக்கை எந்தவொரு சூழ்நிலையிலும் வைக்கப்படவில்லை.

இந்த உயிரிழப்புக்கள் எதனால் ஏற்பட்டதென்று அந்தச் செய்தியில் முன்வைக்கப்படவில்லை.

எங்களைப் பொறுத்தவரை முகாம்களில் நிலவுகின்ற இறப்பு வீதம் இவ்வாறான நிலைமைகளில் இருக்கும் இடம்பெயர்ந்தோர் முகாம்களில்இருக்கக் கூடிய இறப்பு வீதத்திற்குள்தான் இருக்கும்.

சுகாதார அவசர நிலைமையோ அல்லது வேறு எந்த நிலைமையோ ஏறக்குறைய கட்டுப்பாட்டிற்குள்தான் இருக்கின்றன என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

## வட மாகாண கடற்றொழில் அபிவிருத்திக்கு...

அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மேலும் தெரிவிக்கையில்;

இந்த நாட்டின் கடற்பகுதியில் 45 வீதமானவை யாழ். குடா நாட்டு கடற் பகுதியாவுள்ளது.

யாழ் குடாநாட்டு மீனவர்கள் சிறந்த முகாமைத்துவத்தின் மூலம் கடலுணவு உற்பத்தியை அதிகரித்து பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைய் வேண்டும்.

இதற்கு வசதியாக மீன்படி நீரியல் வள அமைச்சு நவீன தொழிநுட்ப முறைகள் மூலம் கடற் றொழிலை அபிவிருத்தி செய்ய உதவி புரியும்.

தற்போது யாழ் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் கடலுணவு வகைகளில் 40 வீதமானவை வீணாகிப் போகின்றது என்பதை நான் அறிந்துள்ளேன் .

என வேமேலதிமாக உள்ள கடலுணவு வகைகளை தென்பகுதிக்கு சீரான ஓர் ஒழுங்கு முறையில் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேன்.

யாழ் மாவடட்த்தைச் சேர்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒவ்வொரு அமைச்சரவைக் கூட்டத்திலும் யாழ். மீனவர்களின் குறைபாடுகள் தொடர்பில் எடுத்துரைப்பார்.

அத்துடன் யாழ் மீனவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமென போராடி வருகின்றார்.

தற்போது எமது அமைச்சு ஊடாக யாழ் குடாநாட்டுமீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் மூலமே நஷ்டஈடு வழங்கமுடியும்.

எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதார நிலைமைக்கமைய மேலதிகமாக நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

எனவே தற்போது யாழ். குடாநாட்டு மீனவர்கள் தமக்கு ஏற்பட்டுள்ளபிரச்சினை தொடர்பில் எனது அமைச்சின் பிரதிச் செயலாளர் பதவியில் யாழ். மீன்பிடி நீரியல் வள திணைக்கள பிரதிப் பணிப்பாளர் தர்மலிங்கத்திடம் கோரிக்கைகளை முன்வைக்கலாம். அவர் உரிய நடவடிக்கை எடுப்பார்.

யாழ். குடாநாட்டு கரையோரப் பகுதிகளில் வெளிச்சவீடு அமைத்தல், இறங்கு துறைகள் அமைத்தல் தொடர்பில் விரைவில் பொறியியலாளர் குழு ஒன்றை அனுப்பிவைப்பேன்.

அக் குழு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் என்றார்.

இதேவேளை கடற்றொழிலில் உள்ள கட்டுப்பாடுகள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் நான் நடவடிக்கை எடுக்க முடியாது. அதனை பாதுகாப்பு அமைச்சே நட வடிக்கை எடுக்கும் எனவும் மீன்பிடி நீரியல் வள அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.





TVS புதிய அறிமுகம் TVS Scooty Streak 90CC

இன்று முதல் விற்பனையாகிறது

★ யாழ். நகரில் முதல் முறையாக புதிய ஸ்கூட்டி ஸ்ரீக்

★ நீங்கள் விரும்பிய நிறங்களில் பெற்றுக் கொள்ளலாம்

TVS Company யின் ஏக விநியோகஸ்தர்

யசோ மோட்டோஸ்

163, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். T.P. No:- 021 222 7566

(C-2776)


# கலைப்பீடப் பரீட்சைகள் 20 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளதாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமரன் அறிவித்துள்ளார். முதலாம்,நான்காம் வருட கலைமாணிப் பரீட்சைகள் எதிர்வரும் 20 ஆம் திகதியும், இரண்டாம் வருடப் பரீட்சை 27ஆம் திகதியும், மூன்றாம் வருடப் பரீட்சை அடுத்த மாதம் 10 ஆம் திகதியும் நடைபெறும். நுண்கலைமாணிப் பரீட்சைகள் (அறிமுறை) முதலாம் வருடம் 27.07.2009, இரண்டாம் வருடம் 30.07. 2009, மூன்றாம் வருடம் 04.08.2009, நான்காம் வருடம் 13.08.2009ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

(ச-14)


## படிவம் விற்பனையாகிறது

★ பொலிஸ் உத்தியோகத்தர் (பெண்கள்)

★ விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் பதவி

★ விலைமதிப்பாளர் பதவி

பூபாலசிங்கம் புத்தகசாலை தொ.பே.:- 6693, 4374, 2422

இல. 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C-2784)

## நியூ சிற்றி ரேடர்ஸ்

சொனி, சொனிக்கா ரேடியோ,பனசொனிக் கசற், ரெக்கோடர், வோக்மன்,கார் ரேடியோ, சொனி,பனசொனி L.G.கலர்T.V., சொனி, பனசொனி DVD பிளேயர்,டிஸ்T.V,மெல்மேன் ரிசீவர், கிறைண்டர், சார்ச லைற், ரைஸ் குக்கர், பிறைசர் குக்கர், மண்ணெண்ணைய் அடுப்புக்கள்,கொற்பிளேட்,அயன்,மேசை,சுவரை மின் விசிறிகள், வூபர்ஸ், அயன், சீக்கோ, சுவர், கை மணிக்கூடுகள், புட்போல், வொளிபோல், கரம் போட், அன்பளிப்பு, அலங்கார பொருள்கள் பெற்றுக் கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருள்களை சிறந்த உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள். நியூ சிற்றி ரேடேர்ஸ்,

T.P:- 021 222 3226 319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

மேற்படி ஸ்தாபனத்திற்கு வேறு கிளைகள் இல்லை.

(மேற்படி ஸ்தாபனம் ஸ்ரான்லி றோட், கே.கே.எஸ். றோட் சந்தியில் இருந்து 6ஆவது கடை)

## தொழிற் பயிற்சிகள்

*Mobile phone Repairing
Hard ware — Hard ware Repairing
Soft ware — Phone Lock
காலம்:- 2மாதம்

*ரேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
Radio, CD player, DVD, Television, AMP, UPS
ஆகியன திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:- 9மாதம்

*ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:- 6 மாதம்

பயிற்சி ஆரம்பம்:- 12.07.2009

JAFFNA TECHNICAL INSTITUTE
45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 6434, 0718561654

(C-2763)

## அடுத்த பிரிவு ஆரம்பம்

AAT,HNDA,Bcom.BBA பூர்த்தி செய்து பாடவிலக்கு பெற விண்ணப்பித்தவர்களும், புதிதாக விண்ணப்பிப்போரும் 14.07.2009 க்கு முன் உடன் தொடர்பு கொள்ளவும்.

CIMA

விபரங்களுக்கு நேரில்

MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

Supported By UNDP/JRRP

பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764



## லாவண்யா பல் மூக்குக் கண்ணாடி அகம்



வடமராட்சி வாடிக்கையாளர்களின் நலன் கருதி எமது நெல்லியடி கிளை தினமும் திறந்திருக்கும்.
மேலும் மூக்குக் கண்ணாடிகள் ,செயற்கைப்பற்கள், மிதப்புப்பற்களுக்கான நிரந்தர கிளிப் அனைத்து விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.



552, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை முன்பாக)

தொ.பே -021 222 9053

கிளை: பருத்தித்துறை வீதி,நெல்லியடி
(பொலிஸ் நிலையம் முன்பாக)

யாழ் மற்றும் வடபகுதி மக்களின் நம்பிக்கைக்கு என்றுமே பாத்திரமாக விளங்குவது...

# டியூரோ

பீ.வீ.சி. குழாய்களும் அதன் பொருத்துகளும்

Duro SINCE 1980 30 YEARS OF EXCELLENCE

SLS 935 · SLSI ISO 9001 · SLS 147





PVC Ball Cocks


COMER - Italy



எச்சரிக்கை:
தரம் அங்கிகரிக்கப்படாத தயாரிப்புகளை வாங்கி பணத்தை விரயமாக்காதீர்



விநியோகித்து சந்தைப்படுத்துவோர்:
டியூரோ பைப் இண்டஸ்ரியல் (பிரைவேட்) லிமிட்டட்
307, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு-13
தொலைபேசி : 2440759, 2440760, 2335636 பெக்ஸ்: 2437646

யாழ் முகவர்:
AHIEZER SUPPLIERS
DURO JAFFNA OPPRATION CENTER
289, பிறவுண்வீதி, கலட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-2782)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.